# புதுவருடத்துக்கு முன் பென்சன்காரருக்கு

## பாக்கிப்பணம் கிடைக்கும்

### அரசாங்க அதிபர் உறுதி


Registered as a NewsPaper in Ceylon   விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி இலக்கம் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 59
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 28   ஸபர் 3   வெள்ளிக்கிழமை   [10-4-70]



உங்களுக்குத் தேவையான
தங்க, வைர நகைகளுக்கு
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 7119   தந்தி: வைரம்



இரும்புத் தகடுகள்
எல்லா கேஜ்களிலும்
கிடைக்கும்
கேஜ் 16, 18, 20, 22, 24
1/8'' 3/16'' 1/4'' 5/16'' 3/8''
8'X4'—8'X3'
கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130


யாழ்ப்பாணம், வெள்ளி
ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியருக்கு வழங்கவேண்டிய பாக்கிப்பணத்தை வருகிற புதுவருடத்துக்கு முன்னர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமாக வடமாகாண அரசாங்க அதிபர் திரு எவ் ஸி பீட்டர்ஸ் பென்சன் டைரக்டருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

பென்சன்காரரின் தூதுக்குழு ஒன்று இது சம்பந்தமாக அரசாங்க அதிபரை சந்தித்துப்பேசியபோதே அரசாங்க அதிபர் இத்தகவலை வெளியிட்டார். திரு எம். எஸ். நாதன் தலைமையில் சென்ற தூதுக்குழு புதுவருடத்துக்கு முன்னர் தங்களுக்கு குறிப்பிட்ட பாக்கிப் பணத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படியும், இதுசம்பந்தமாககச் சரி ஊழியர்களுக்கு தங்களால் ஆன உதவிகளைச் சிரமதானமூலம் செய்துதருவதாகவும் அரசாங்க அதிபரிடம் தெரிவித்தது.

**அரைவாசி பென்சன் பணமாவது தருக**

பாக்கிப்பணம் வழங்கமுடியாத பட்சத்தில் மாதாந்தப் பென்சன் தொகையில் அரைவாசிப்பணத்தையாவது புதுவருடத்துக்குமுன் முற்பணமாக வழங்குமாறு தூதுக்குழு அரசாங்க அதிபரை வற்புறுத்தியது.

புதுவருடத்துக்கு முன்னர் பாக்கிப்பணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக அரசாங்கஅதிபர் தெரிவித்தார்,

சத்பளக்கமிஷன்சிபார்சுப்படி உயர்த்தப்பட்ட பென்ஷன் பணத்தை புதுவருடத்துக்கு முன்னர் வழங்குமாறு திறைசேரி சகல கச்சேரிகளுக்கும் அறிவித்திருந்தபோதிலும், யாழ். கச்சேரி தாமதம் செய்வதாக நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் செய்திவெளியாகியிருந்தது தெரிந்ததே.

---

## ஏப்ரல் 23 முதல் மே 28 வரை

# எந்த இடத்திலும் கொடிகள் சுலோக அட்டைகளுக்குத்தடை!

## சட்டத்தை மீறுவோருக்குச் சிறை

### பொலிஸாருக்கு விசேஷ அதிகாரம்

— நமது அலுவலக நிருபர் கா யோகநாதன் —

யாழ்ப்பாணம், வெள்ளி
பொதுத் தேர்தல் நியமனத் தினமான ஏப்ரல் 23-ம் தேதி முதல் மே 28-ம் தேதிவரை பொது இடங்களிலோ தனிப்பட்ட இடங்களிலோ கட்சிக் கொடிகளோ சுலோகச் சீலைகளோ கட்டப்படாது சுவர்களிலோ ரோட்டுக்களிலோ தேர்தல் சுலோகங்கள் எதுவும் எழுதப்படாது. துண்டுப் பிரசுரங்கள் தேர்தல் பிரசுரங்கள் எதுவும் விநியோகிக்கப்படக்கூடாது. இம்மாதம் 23-ம் திகதி அகற்றப்படவேண்டுமென்றும் அல்லது அக் காணிச் சொந்தக்காரர்மீது பொலிசார் கடும் நடவடிக்கை எடுப்பார்களென்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

[illegible]ரிப்பட்ட சுவர்களில் தேர்தல் சுலோகங்கள் எதுவும் எழுதப்பட்டிருந்தால் இம்மாதம் 23-ம்திகதி அழிக்கப்பட வேண்டுமென்றும் அல்லது அக்கட்ட[illegible] சொந்தக்காரர்மீது பொலிசார் நடவடிக்கை எடுப்[illegible]

போன்ற பொது இடங்களில் பொதுத்தேர்தல் சம்பந்தப்பட்ட துண்டுப் பிரசுரங்களை இம்மாதம் 23-ம் தேதிக்குப் பின்னர் யாராவது விநியோகித்தால் அவர்கள மீதும் பொலிசார் நடவடிக்கை எடுப்பார்[illegible]ளென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் சட்டத்தை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி வடபகுதி பொலிஸ் [illegible]பர் திரு ஆர். சுந்தரலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ஒத்துழைப்பதன் மூலமே உரிமைகளை பெறலாம்

யாழ்ப்பாணம், வெள்ளி
தேர்தலுக்கு பின்னர் எந்தக்கட்சியாவது தமிழரின் உரிமைகளை தரமுன் வராவிட்டால் போராட்டத்தில் குதிக்க போவதாக தமிழரசு கட்சியினர் கூறுகின்றனர்: எந்தவிதமான போராட்டம் என்பதை இப்பொழுதே பகிரங்கமாக தெரிவித்தால் அப்படியான போராட்டத்திற்கு தாங்கள்தயாரா? இல்லையா? என்பதை இத்தேர்தல்மூலம் தமிழ் மக்கள் எடுத்துக்காட்டுவார்கள்.

நீர்வேலியில் தமிழ்காங்கிரஸ் கிளையை திறந்து வைத்[illegible]

போராட்டத்தினுல் பல தொல்லைகள் பட்டனர். அப்படியான போராட்டத்தை தமிழ் மக்கள் இன்று விரும்பவில்லை. அறப்போராட்டத்தினுல் எவ்விதபலனும் ஏற்படப்போவதில்லை என்பதை மக்கள் உணர்ந்துவிட்டனர். அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன் மூலமே தமிழரின் உரிமைகளை பெறுவதோடு தமிழ் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யலாம்.

கோப்பாய் கிராமசபை தலைவர் திரு தி பரமானந்தராசாபேசும்போது தமிழரசு கட்சியினர் தேசிய அரசாங்[illegible]

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி
நேற்று அதிஷ்டம் பார்க்கப்பட்ட 293-வது சுவீப் முடிவுகள் வருமாறு:

**1-வது பரிசு**
06 R 0175 - ரூ. 100,000

**2-வது பரிசு**
21 D 0912 - ரூ. 40,000

**3-வது பரிசு**
44 K 0010 - ரூ. 10,000

தலா ரூபா 622,40 சதம் பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 01 A 0490 | 37 A 0035 |
| 02 B 0576 | 03 B 0506 |

---

கரவெட்டியில் அதிசயம்:

## 2வயதுபெண்குழந்தை ஆணக மாறியது!

உடுப்பிட்டி, வியாழன்
இரண்டு வயதுப் பெண்குழந்தை ஆணாக மாறியது. இந்த அதிசய சம்பவம் கரவெட்டி கிழக்கில் நிகழ்ந்துள்ளது.

சாம்பசிவம் என்பவரின் புதல்வியான 'தமிழரசி' என்னும் சிறுமியே ஆணக மாறிய விந்தைக்குள்ளாகியிருக்கிருள்.

தமிழரசி ஆணக மாறியதால், அவளுக்கு இப்பொழுது 'தமிழரசன்' என்று பெயரிடப்பட்டுளது. ஆண்களுக்குரிய சகல உறுப்புகளுடனும் இச் சிறுவன் வாழ்ந்து வருகிருன்.

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் பூரண சிகிச்சைபெற்றபின் சிறுமி, சிறுவனுக வீடுதிரும்பியிருககிருர்.

---

## பூநகரியில் ரூ. 11 லட்சத்தில் முஸ்லிம்களுக்குகுடியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி நிலமும், 5,350 ரூபாவும்

ரங்கமாக தெரிவித்தால் அப்படியான போராட்டத்திற்கு தாங்கள் தயாரா? இல்லையா? என்பதை இத்தேர்தல்மூலம் தமிழ் மக்கள் எடுத்துக்காட்டுவார்கள்.

நீர்வேலியில் தமிழ்காங்கிரஸ் கிளையை திறந்து வைத்துப் பேசிய திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு குமார் பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: கடந்த காலங்களில் அறப்போராட்டங்கள் மூலம் தமிழ்மக்கள் பெரும்கஷ்டப்பட்டனர். திட்ட மில்லாத பதன் மூலமே தமிழரின் உரிமைகளை பெறுவதோடு தமிழ் பகுதிகளையும் அபிவிருத்தி செய்யலாம்.

கோப்பாய் கிராமசபை தலைவர் திரு தி. பரமானந்தராசா பேசும்போது தமிழரசு கட்சியினர் தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின்னர் தான் தமிழ் காங்கிரஸின் முயற்சியால் பல அபிவிருத்தி திட்டங்கள் வடபகுதியில் உருவாகியுள்ளன வென்றும் கூறினர்.

திரு. எஸ். குணரத்தினம் திரு. எஸ். சிறிதரம் மற்றும் பலர் பேசினர்கள்.

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்
## இருமாதம் அரசியலுக்கு முழுக்கு!

கோப்பாய், வியாழன்

அகில இலங்கை வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் அடுத்த இருமாதங்களுக்கும் அரசியலில் பிரவேசிக்காது. எதிர்வரும் பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர் சங்கத்தின்போராட்டத்திட்டங்களுக்கான வழிமுறைகள் குறித்து ஆலோசிக்கப்படும். பொதுசன அபிப்பிராயத்தை மேலும் வளர்த்த பின்னரே அரசியல் பிரவேசம் குறித்து ஆராயப்படும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அகில இலங்கை வேலையற்றபட்டதாரிகள் சங்கப்பொதுச்சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன.

புதிய நிர்வாகிகள் தெரிவில், போஷகராக திரு. கே. சதானந்தனும், தலைவராகத் திரு. ஆர். தேவதாசனும், உபதலைவர்களாகத் திருவாளர்கள் எஸ். ஆறுமுகராஜாவும், எம். சின்னத்துரையும், இணைச்செயலாளர்களாக, திரு கே. மகாலிங்கம், கே. சச்சிதானந்தம் ஆகியோரும், பொருளாளராகத் திரு. ஆர். சிவராசாவும் நிர்வாகசபை அங்கத்தவர்களாகத் தொகுதிவாரியாக தலா இருவரும் நியமிக்கப்பட்டனர்.

அரசாங்கத்தால் வழங்கப்படும் மாணவ ஆசிரியர் பதவிக்கு சங்கத்திலிருந்து பெரும் பான்மையான விண்ணப்பங்களை அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

சிலைகளோகட்டப்படாது சுவர்களிலோ ரோட்டுக்களிலோ தேர்தல் சுலோகங்கள் எதுவும் எழுதப்படாது. துண்டுப் பிரசுரங்கள் தேர்தல் பிரசுரங்கள் எதுவும் விநியோகிக்கக் கூடாது. இவற்றை மீறுவோர்மீது பொலிசார் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள்.

இக் குற்றங்களை செய்வோர், அல்லது செய்ய முயற்சிப்போர் தேர்தல் சட்டப்படி கோர்ட்டில் குற்றவாளியாகக் காணப்பட்டால் 1 மாத சிறைத் தண்டனை அல்லது 100 ரூபா அபராதம் விதிக்கப்படுவார்கள்.

இக் குற்றங்களை செய்வோர்மீது அல்லது செய்ய முயற்சிப்போர் மீது பொலிசார் கடும் நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் நியமனத்தினமான ஏப்ரல் 23-ம் தேதிக்கு பின்னர் அபேட்சகரின் வாகனத்தில் அல்லது அவரது ஏஜன்டின் வாகனத்தில் மட்டுமே கட்சிக்கொடி கட்டலாம்

வீதிக்கு குறுக்கேயோ வீதியின் ஓரத்திலோ, பொது இடங்களிலோ, தனிப்பட்ட கட்டிடங்களிலோ கட்சிக் கொடிகளோ சுலோக அட்டைகளோ கட்டக் கூடாது.

தற்பொழுது பனை மரங்களிலும் தென்னை மரங்களிலும் கட்டப்பட்டிருக்கும் கட்சிக் கொடிகள் இம்மாதம் தேர்தல் சுலோகங்கள் எதுவும் எழுதப்பட்டிருந்தால் இம்மாதம் 23-ம்திகதி அழிக்கப்பட வேண்டுமென்றும் அல்லது அக்கட்டட சொந்தக்காரர்மீது பொலிசார் க... நடவடிக்கை எடுப்பார்களென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் கூட்டம் நடக்கும் தினங்களில் தேர்தல் கூட்டம் நடைபெறும்இடத்தில் மட்டும் கட்சிக் கொடிகளும் சுலோக அட்டைகளும் கட்டலாம் என்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

பஸ் நிலையம் சந்தை றும் அவர் மேலும் தெரிவித்தார்.

தேர்தல் கூட்டத்தை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி வடபகுதி பொலிஸ் ...பர் திரு ஆர். சுந்தரலிங்கம் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இம் மாதம் 23-ம் திகதி முதல் மே 28-ம் தேதி வரை ஊர்வலத்திற்கு தடை விதிக்கப்பட்டிருப்பதாகவும் மேதினத்தன்று மட்டும் ஊர்வலத்திற்கு அனுமதி வழங்கப்படுமென்றும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

# கொடிகள் காரணமாக அசம்பாவிதம் ஏற்படலாம்
## மயிலிட்டியில் பொலிஸார் தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

காங்கேசன்துறையிலுள்ள மயிலிட்டிப் பகுதியில் வீடுகள் தோறும், வீதிகள் தோறும் கட்சிக்கொடிகள் கட்டியிருப்பதால், அசம்பாவிதங்கள் நிகழக்கூடுமென பொலிஸ் வட்டாரங்களில் அச்சம் நிலவுகிறது.

இதன் காரணமாக இப்பகுதியில் பொலிஸார் கண்காணிப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது இப்பகுதியில் பொலிசார் ரோந்துசுற்றி வருகிறார்கள். பொதுஜன அமைதிக்குப் பங்கம் விளைவிப்போர் எவராயிருந்தாலும்சரி, கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிசார் தெரிவித்துள்ளனர்,

சாவகச்சேரித் தொகுதியிலுள்ள கொடிகாமப் பகுதியில் கொடிகள் போட்டியாகக் கட்டப்பட்டதைத் தொடர்ந்து சில அசம்பாவிதங்கள் ஏற்பட்டதாகவும் இதைத்தொடர்ந்து சாவகச்சேரித் தொகுதியில் போட்டியிடும் திரு. வி. என். நவரத்தினமும், திரு. வி குமாரசாமியும், வடபகுதி பொலிஸ் அதிபரைச் சந்தித்து சமாதான முறையில் பெப்ரவரி 1-ம் தேதி முதல் சாவகச்சேரியில் பொதுஇடங்களில் கொடிகளோ, சுலோக அட்டைகளோ கட்டுவதில்லை என முடிவு செய்தனரென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

சாவகச்சேரித் தொகுதியைப் பின்பற்றி மற்றும் தொகுதிகளிலும், கொடிகள், சுலோக அட்டைகளை கட்டுவதை உடனடியாக சமாதானமான முறையில் நிறுத்திக்கொண்டால், பொதுசன அமைதி ஏற்படுமென பொலிஸார் நம்புகின்றனர்.

### தேர்தல் தினத்தில் கடமையாற்ற
# வடமாகாணத்துக்கு 675 பொலிஸார் தேவை!
## யாழ் பொலிஸ் அதிபர் கோருகிறார்!

யாழ்ப்பாணம், வெள்ளி

வடமாகாணத்திலுள்ள 13 தொகுதிகளிலும் தேர்தல் தினத்தில் கடமையாற்றுவதற்கு 675 பொலிசார் தேவையென வடபகுதிப் பொலிஸ் அதிபர் மேலிடத்திடம் கோரியுள்ளார்.

எதிர்வரும் தேர்தல் தினத்தில் வடமாகாணத்தில் 80 இன்ஸ்பெக்டர்களும், 125 சார்ஜண்டுகளும், 675 பொலிஸ்கான்ஸ்டபிள்களும் 85 ஜீப் சாரதிகளும் கடமையாற்றுவார்கள்.

1965-ம் ஆண்டு நடந்த தேர்தலில் வடமாகாணத்தில் 67இன்ஸ்பெக்டர்களும் 100 சார்ஜண்டுகளும் 581 பொலிஸ்கான்ஸ்டபிள்களும் 57 ஜீப் சாரதிகளும் கடமையாற்றினர்கள்.

வடமாகாணத்தில்அடுத்த தேர்தலில் 465 வாக்களிப்பு நிலையங்கள் இருக்கும். 1965-ம் ஆண்டுத் தேர்தலில் 404 வாக்களிப்பு நிலையங்கள் இருந்தன.

வடமாகாணத்தில் இம்முறை வாக்காளர் தொகை 41,9034. 1965-ம் ஆண்டுத் தேர்தலில் வாக்காளர் தொகை 38,4350.

44 K 0010 - ரூ. 10,000

தலா ரூபா 622,40 சதம் பெறும் 100 டிக்கெட்டுகள் விபரம்:

| | |
|---|---|
| 01 A 0490 | 37 A 0035 |
| 02 B 0576 | 03 B 0506 |
| 17 B 0705 | 04 B 0978 |
| 24 B 0791 | 39 B 0126 |
| 37 B 0714 | 38 C 0166 |
| 17 C 0310 | 36 C 0577 |
| 05 C 0820 | 39 C 0720 |
| 36 D 0795 | 16 D 0269 |
| 11 D 0335 | 01 E 0922 |
| 26 E 0218 | 14 E 0617 |
| 39 E 0697 | 39 E 0239 |
| 27 E 0791 | 01 F 0481 |
| 25 F 0792 | 07 F 0292 |
| 01 F 0183 | 26 F 1000 |
| 31 F 0634 | 43 F 0457 |
| 36 F 0817 | 04 G 0763 |
| 05 H 0456 | 25 H 0720 |
| 44 H 0120 | 23 H 0307 |
| 24 J 0581 | 38 J 0577 |
| 41 J 0598 | 07 J 0712 |
| 24 K 0599 | 05 K 0477 |
| 28 K 0140 | 02 K 0993 |
| 06 K 0147 | 13 K 0512 |
| 26 L 0377 | 28 L 0889 |
| 27 L 0921 | 09 L 0129 |
| 15 L 0911 | 35 L 0505 |
| 41 L 0031 | 43 L 0854 |
| 35 L 0595 | 06 L 0462 |
| 17 M 0487 | 18 M 0468 |
| 43 M 0172 | 16 M 0353 |
| 39 M 0373 | 07 M 0024 |
| 12 M 0877 | 13 N 0181 |
| 41 N 0894 | 43 N 0972 |
| 39 N 0605 | 04 O 0975 |
| 20 O 0196 | 29 O 0833 |
| 38 O 0292 | 43 P 0343 |
| 32 P 0552 | 39 Q 0012 |
| 28 Q 0312 | 09 Q 0433 |
| 39 Q 0467 | 19 Q 0544 |
| 39 Q 0655 | 28 R 0136 |
| 29 S 0909 | 37 S 0587 |
| 23 S 0773 | 23 S 0234 |
| 22 T 0062 | 22 U 0856 |
| 36 V 0025 | 18 V 0866 |
| 03 W 0112 | 28 W 0872 |
| 06 W 0661 | 20 X 0728 |
| 01 X 0554 | 09 X 0437 |
| 23 X 0884 | 29 Y 0286 |
| 20 Y 0859 | 29 Y 0595 |
| 23 Z 0879 | 22 Z 0948 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் சுவாமி ஆலயத்தில் சுக்கிரவாரமாகிய இன்று மாலை 6-7 மணிவரை திரு. க. கி. நடராஜன் அவர்களினுல் பெரிய புராணவிரிவுரையில் ''ஜோதிமுத்து சிவிகை'' என்ற பொருள் பற்றிய பிரசங்கமும் இரவு 7 மணிக்கு சுக்கிரவார அம்மன் உற்சவமும் இரவு 7-15 யிலிருந்து 8 மணிவரை திரு. வி. நல்லையா அவர்களின் கதாப்பிரசங்கமும் நிகழும்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு
# வீதி குற்றங்களைத் தடுக்க பொலிசார் உதவுவர்

கொழும்பு, வியா.

நகரசபைகள், பட்டின சபைகளின் உத்தரகளை மீறி வீதிகளில் குற்றம் புரிகிறவர்கள் விஷயத்தில் நடவடிக்கைகள் எடுப்பதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொலிசார் பூரண ஒத்துழைப்பு அளிப்பார்கள்.

பட்டினசபைகள் நகரசபைகள்சட்டத்தின் மூன்றும் பிரிவை மீறுகிறவர்கள் விஷயத்தில் நடவடிக்கைகள் எடுப்பதில் இந்த சபைகளுக்கு தமது அதிகாரத்துக்குட்பட்ட அவசியமான எல்லா உதவிகளையும் செய்யும் படி பொலிசாருக்கு இன்ஸ்பெக்டர் ஜெனரல் உத்தரவு பிறபித்துள்ளார்.

நெடும்பாதைகளைத்தடை செய்வது பாதைகளில் ஆக்கிரமிப்புசெய்வது, பாதைகளை சேதப்படுத்துவது, பாதைகளில் தொல்லைகள் புரிவது, பாதைகள் வழியேகட்டிடங்கள் போடுவது, கால்நடைகள் பிடிப்போர் விஷயத்தில் தலையிடுவதுபோன்ற குற்றங்களைப்புரிகிறவர்களுக்கு எதிராக நடவடிக்கைஎடுப்பதில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பொலீசார் உதவுவர். உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர் பிரேமதாஸ பிரதமமந்திரிக்கு விடுத்த ஒரு வேண்டுகோளைத் தொடர்ந்து இந்த ஒழுங்கு செய்யப்படுகின்றது

மேற் குறித்த குற்றங்கள் புரிகிறவர்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பதில் பொலிசாரின் ஒத்துழைப்பு கிடைப்பதில் ஏற்படும் தாமதங்கள் குறித்து பல உள்ளூராட்சி மன்றங்கள் அரசங்கத்துக்குப் புகார் செய்துள்ளன.

மேற் குறித்த குற்றங்கள் புரிகிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் உள்ளூராட்சி மன்றங்கள் இனிமேல் பொலிசரின் ஒத்துழைப்பைப் பெறுவதில் சிரமம் இருக்காது.

— —

## தொலைபேசி வசதி

தாவடி, வியா.

தாவடி உபதபால் நிலையத்திற்குவெகுவிரைவில்தொலைபேசி வசதி கிடைக்கவிருக்கிறது. இதற்கான நடவடிக்கைகள் துரிதமாக நடைபெறுகின்றன.

# பூநகரியில் ரூ. 11 லட்சத்தில் முஸ்லிம்களுக்குகுடியேற்றம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பூநகரி பள்ளிகுடாவில், சுமார் 11 லட்சம் ரூபா செலவில் முஸ்லிம் மக்களுக்கென குடியேற்ற திட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் 200 முஸ்லீம் குடும்பங்கள் குடியேற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு முஸ்லிம் குடும்பத்தினருக்கும் 5 ஏக்கர் நிலமும், 5,350 ரூபாவும் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் மாநகர சபையில் 19-ம், 21-ம் வட்டாரங்களில் வசிக்கும் வறிய முஸ்லிம் மக்கள் மட்டுமே இதற்கு மனுச்செய்யலாம். இத் திட்டத்தை கூடிய விரைவில்நிறைவேற்றுவதற்கான முயற்சியில் முன்னாள் யாழ்ப்பாண எம் பி திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் ஈடுபட்டுள்ளார்.

சாராயத்
# தவறணையில் அமெரிக்க துப்பாக்கி கண்டுபிடிப்பு
## ஊர்காவற்றுறையில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊர்காவற்றுறைத்தொகுதியில் உள்ள சாராயத் தவறணையொன்றில் நான்கு குண்டுகளுடன் ஒரு அமெரிக்க கைத்துப்பாக்கியை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இன்ஸ்பெக்டர் ஏ. இராசையா, கைத்துப்பாக்கியை கைப்பற்றியதுடன், சந்தேகத்தின் பேரில் நடராசா என்பவரையும் கைது செய்துள்ளார்.

பொலிஸ் கோஷ்டியினர் கந்தர் மடத்தில் உள்ள வீடொன்றை இதுசம்பந்தமாக நேற்று சோதனை நடத்தியபோதும் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை.

பொலிஸார் தொடர்ந்து புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

# அரசியல் கூட்டத்தில் குண்டுவீச்சு;
## 10 பேர் காயம்

கொழும்பு, வியாழன்

அரசியல் கூட்டமொன்றில் நடைபெற்ற குண்டு வீச்சு சம்பவத்தினுல்10பேர் காயமடைந்தனர். இச்சம்பவம் நேற்றிரவு கோட்டைத் தொகுதியில் நடைபெற்றுள்ளது,

கூட்டுமுன்னணியின் அரசியல் கூட்டமொன்றிலிருந்து திரும்பிக்கொண்டிருந்த வித்தியோதய பல்கலைக்கழக மாணவர்கள்மீது குண்டு வீசப்பட்டதாககூறப்படுகிறது. காயமடைந்த 10பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனா.

அரசியல் கூட்டங்களில் நடைபெற்ற அசம்பாவித சம்பவம் இதுவே முதலாவதாகும். இதுசம்பந்தமாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. (சி பி ஏ)

## மண்டலசார்பற்ற நாடுகளின் 2-வது மாநாடு

கொழும்பு, வியா.

மண்டலசார்பற்ற நாடுகளின் 2-வது மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக இலங்கைத் தூதுக்குழு இன்று விமானமூலம் பயணமானது.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற மகாநாட்டிற்குத் தலைமை வகித்த வெளிவிவகார அமைச்சின் நிரந்தரச் காரியதரிசி திரு. ஜி.வி.பி. சமரசிங்க தூதுக் குழுவுக்குத் தலைமை வகித்துச் செல்கிறுர். இவருடன் திரு. பி. பொன்சேகா, சுகந்தா டீ அல்விஸ், எல். ஜெயவர்த்தனு ஆகியோரும் சென்றுள்ளனர். (சி. பி. ஏ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

வியாபார அனுபவமுள்ள சிப்பந்தியும் அச்சுயந்திர இயக்குனரும் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். ஸ்ரீதையல்நாயகி அச்சகம், 320, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 2029

கிழக்கிலங்கையில் ஸ்தாபிதமான தேசிய பத்திரிகை அலுவலகமொன்றில் கடமைபுரிய மனேஜர், காஷியர் தேவை. சம்பளம் முறையே ரூபா 250/-, 175/-. பிணைப்பணம் ரூபா 2500/-, 1500-/ (ரொக்கம்) கட்டக்கூடிய நேர்மையானவர்கள் தராதரம், அனுபவம் குறிப்பிட்டு 16-ம் திகதிக்குள் விண்ணப்பிக்கவும். விளம்பர இல.2022,C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 2022

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தியேட்டருக்கு உதவி மனேஜரும், புக்கிங்கிளார்க்கும் தேவை. பிணைப் பணம் உதவி மனேஜர் 3000/-, புக்கிங் கிளார்க் 2,500/-. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இல 2033. C/o. 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2033

## விற்பனைக்கு

இனிப்பு முந்திரியப்பழம் விற்பனைக்குண்டு. விலை இரு. ரூபா 6/- விபரங்களுக்கு: இ தனஞயகம், தொண்டைமானாறு. 2102

கார்
CL 4840 சீரியல் உள்ள அட்சன் கார் ஓடக்கூடிய நிலைமையில் இருக்கின்றது. ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 236/4 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2026

லொறி
22 ஸ்ரீ 1209 மொக்கன் லொறி விற்பனைக்கு இருக்கிறது. ச. ச. இராசரெத்தினம், 236/4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2027

மில்
நெல் அரைக்கும் அரிசி ஆலை சகலவித தளபாடங்களுடன் ஓடக்கூடிய நிலைமையில் இருக்கின்றது. நேரில் பார்கக விரும்புவோர் கீழ்க்காணும் விலாசத்தில் பார்வையிடலாம். தவணைமுறையிலும் கொடுக்கப்படும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், பெற்றோல் ஸ்ரேசன் பரந்தன் 2028

காணி
5 பரப்பு காணி விலைக்கு இருக்கிறது. சகல வசதிக்கும் உட்பட இருபாலை ...

அரசாங்க ஏல விற்பனை
பொலிஸ் திணைக்களம்

என். 1501- பாவித்த யூனிபோமுகள், தோல் பொருட்கள், சப்பாத்துகள், மெத்தைகள், தொப்பிகள், சைக்கிள்கள், தட்டச்சுகள்' ரேடியோக்கள், பெற்றோமாக்ஸ் லாம்புகள் முதலியன 1970-4-27 காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய வளவில் விற்கப்படும். மேலதிக விபரங்கட்கு 1970-4-10ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும். GP 2471

அரசாங்கக் கேள்விகள்
கமத்தொழிற் சேவைத் திணைக்களம்

என். 1520-1969'70-ம் நிதி வருடத்தில் கிளிநொச்சி உரப் பண்டசாலையில் இருந்து நகரி உரப் பண்டசாலைக்கு வாகன சேவைக்கான கேள்விப் பத்திரங்கள் 1970-5-2ந் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு யாழ்ப்பாணம் கமத்தொழிற் சேவை உதவி ஆணையாளரினல் ஏற்றுக் கொள்ளப்படும். மேலதிக விபரங்கட்கு 1970-4-10ந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையைப் பார்க்கவும். GP 2462

## கோயில் திருட்டு
### ஒருவர் கைது

மாவிட்டபுரம், வியா.

சுன்னுகம் ஐயனர் கோவில் திருட்டு சம்பந்தமாக ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதானர்.

சுன்னுகம் ஐயனர் கோவிலில் இனந்தெரியாத நபர்கள் புகுந்து கோவில் விக்கிரகங்களைப்பிடுங்கி பொருட்களைக் களவாடியதாக முகாமையாளர் புகார் செய்ததையடுத்து, தீவிரவிசாரணையில் ஈடுபட்ட சுன்னுகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் சுன்னுகத்தைச் சேர்ந்த கே. இராசரத்தினம் என்பவரை கைதுசெய்தனர்.



உ
சிவமயம்

## வீட்டுக் கிருத்திய அழைப்பு

அமரரான எனது கணவர் இந்நுப்போட் இராசரத்தினம் அவர்களின் முப்பத்தோராம் நாள் முடிவுக் கிரியைகள் அவருடைய இல்லத்தில் நாளை 11-4-70 சனிக்கிழமை முற்பகல் 12 மணியளவில் நடைபெறும். அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். தனித்தனி அழைப்பிதழ் அனுப்ப முடியாமை குறித்து வருந்துகின்றோம்.

திருமதி செ. இராசரத்தினம்,
23, வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். 2104

## யாருடையது?

யாழ்ப்பாணம் வீதியொன்றில் கண்டெடுக்கப்பட்ட கூப்பன் புத்தகம்ஒன்று வசாவிளானைச் சேர்ந்த க. கேதாரசிங்கம் என்பவரால் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது, உரியவர் காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

## இலங்கையின் இறக்குமதி அதிகரித்துள்ளது

கோட்டை, வியா.

சென்ற ஆண்டு பீக்ஸ் திட்டத்தினுல் இலங்கையின் இறக்குமதி அதிகரித்துள்ளது. பிரிட்டனிடமிருந்து மட்டும் 12 கோடி 60 லட்சம் ரூபாவுக்கும் கூடிய பொருட்கள் 1962-ம்ஆண்டிலும் பார்க்க இவ்வாண்டு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன எனத்தெரியவருகிறது

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.
காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற் சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந்தமிழ், 8-00 செய்திச்சுருக்கம் 8-03 குர்-ஆன், 8-15 இஸ்லாமியகீதம், 8-30 செய்திச் சுருக்கம்.

334 மீ. அன்ட் 49 மீ.
பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன்ட் 61 மீ
மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 வாத்திய இசை. 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி 9-30 இசைப்பயிற்சி, 10 30 செய்திச்சுருக்கம்.

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 28-ம் திகதி [10-4-70]

### சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை

மேஷம்- எதிர்பாராதவகையில் பொருள் விரையமாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையக்கூடும். சிந்தையில் குழப்பநிலை ஏற்படும். மனைவியின் உடல்நலம் சிறிது பாதிக்கப்படலாம். மனத்திடம்வேண்டும்.

ரிஷபம்- சிந்தனை அலைகளின் மத்தியில் சிரமப்படுவீர்கள். எதிலும் விரக்திமனப்பான்மை தென்படும். எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம். குழந்தையொன்றின் உடல்நலன் பாதிக்கப்படலாம். பொருளும் செலவாகும்.

மிதுனம்- போதுமென்ற மனத்துடன் இருப்பீர்கள். எதிலு[illegible] நிறைவு தென்படும். முதியவர் ஒருவ[illegible] அறிவுரை உங்களுக்கு புதிய பாதையைக் காட்டும். குடும்பத்திலும் அன்பு தவழும்.

கடகம்- வாழ்க்கை புதிராக தோன்றும். ஆசாரக் குறைவுக்கு இடமுண்டு. சகோதரி ஒருவரின் பிரச்சினை மனதிற்கு [illegible] வீட்டிலேயே உபத்[illegible]வங்கள் [illegible] வேண்டும்.

சிம்மம்- தன்மானமிகுதிக்கும் தனவரவுக்கும் இ...

யாழ். மத்தியகல்லூரியை

# கொழும்பு றேயல்கோஷ்டி இன்னிங்ஸால் வென்றது

## சி. ஜே. பெர்னண்டோ 117 ஓட்டங்களைப் பெற்றார்

யாழ்ப்பாணம், வெள்ளி

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபலம்கொண்ட றேயல் கிரிக்கெட் கோஷ்டி அமோக வெற்றியுடன் கொழும்பு திரும்பியுள்ளது.

கொழும்பு றேயல் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான இரண்டுநாள் கிரிக்கெட் போட்டியில் றேயல் கல்லூரி இன்னிங்ஸாலும் 6 அதிகப்படியான விக்கெட்டுகளாலும் 76 மேலதிக ஓட்ட்ங்களாலும் மிக இலகுவாக யாழ் மத்திய கல்லூரியை வெற்றி பெற்றது.

முதலில்கொழும்பு றேயல் கல்லூரியே துடுப்பெடுத்தாட முற்பட்டது, முதல் நாள் போட்டியில் றேயல் கல்லூரி ஒரு விக்கெட்டை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றபோது மழை குறுக்கிட்டதால் முதல்நாள் ஆட்டம் முற்றாக கைவிடப் பட்டது.

இரண்டாம்நாள் போட்டி காலை 9 மணிக்கு ஆரம்பமானபோது றேயல் கல்லூரி துடுப்படி வீரர்களான சி. ஜே. பெர்னண்டோவும் என். டி. பி. கெட்டியாராச்சியும் துடுப்பெடுத்தாடினர் இவ்விருவரும் மிகச் சிறப்பாகவும் அதிவேகமாகவும் ஓட்டங்களின் எண்ணிக்கையை பெருக்கிய வண்ணமே இருந்தனர் இருவரும் சோடி சேர்ந்துநீண்டநேரம் துடுப்பெடுத்தாடியது கிரிக்கெட் பிரியர்களுக்கு ஒரு நல்ல விருந்தாகவே இருந்தது. கெட்டியாராய்ச்சி, மத்தியகல்லூரி பந்துவீச்சு வீரர் பிரேமச்சந்திரனின் பந்து வீச்சுக்கு 75 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். றேயல் கல்லூரி தனது இரண்டாவது விக்கெட்டை இழந்தபோது 172 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்பின் இக் கல்லூரி அடுத்தடுத்துஇரு விக்கெட்டுகளை இழந்தது இந்த இரு விக்கெட்டுகளையும் வீரர் ரஞ்சித்குமார் வீழ்த்தினர் ஆனல் சி. ஜே. பெர்னண்டோவை யாழ் மத்திய கல்லூரி வீரர்களால் ஆட்டமிழக்கச் செய்ய முடியவில்லை. இவர் 117 ஓட்டங்களை ஆட்டமிளக்காதுபெற்ருர்.

சி. ஜே. பெர்னண்டோ இலங்கை கல்லூரி வீரர்களில் முன்னணி வகிக்கும் ஒரு சிறந்த துடுப்படிவீரர். இவர் சென்ற வருடம் இலங்கை பாடசாலை கிரிக்கெட் கோஷ்டியில் அங்கம் வகித்து பாரதம் சென்று துடுப்படியில்பலசாதனைகளை புரிந்தவர், இம்முறைறேயல் கல்லூரியில் அங்கம் வகிக்கும் வீரர்களில் 6 வீரர்கள் இலங்கை பாடசாலை தெரிவுக் கோஷ்டியில் அங்கம் வகித்தவர்கள் என்பதுகுறிப்பிடத்தக்கது.

றேயல் கல்லூரி தனது முதல் இன்னிங்ஸில் 4விக்கெட்டுகளை இழந்து 233 ஓட்டங்களைப் பெற்றதும், ஆட்டத்தை நிறுத்திக் கொண்டு, யாழ்மத்திய கல்லூரியை துடுப்பெடுத்தாட விட்டது. இக் கோஷ்டி 59 ஓட்டங்களுக்கு எல்லா விக்கெட்டுகளையும் இழந்தது. இதில் ரி. தயாசிங்கம் மட்டும் 17 ஓட்டங்களைப் பெற்ருர். லோட்டன் 6ஓட்டங்களுக்கு 4விக்கெட்டுக்களையும் மென்டிஸ் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். யாழ்மத்திய கல்லூரி 2-வது இன்னிங்ஸிலும் மொத்தம் 98 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதிலும் ரி தயாசிங்கம் 36 ஓட்டங்களைப் பெற்ருர். இவர் அடுத்தடுத்து அடித்த மூன்று 'சிக்ஸேர்ஸ்' சோர்வடைந்திருந்த ரசிகர்களுக்கு உற்சாகத்தை ஊட்டியது எம்.எஸ் அபூபக்கர் 21 ஓட்டங்களை மிகச் சிறப்பாகப் பெற்ருர்.

இவர் இவ்வருடம் பங்குபற்றிய முதல் கிரிக்கெட் போட்டி இதுவாக இருந்த போதிலும், இவரது கிரிக்கெட்ஆட்டம் ரசிகர்களை மிகவும் கவர்ந்திருந்தது.

இப்போட்டி யாழ் மத்திய கல்லூரிமைதானத்தில் நடைபெற்றது. (தே நி)

## நல்லியக்கசபை திறப்புவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

காரைநகர் வாரிவளவு நல்லியக்கச் சபையின் அங்குரார்ப்பண விழாவும், புது மண்டபத் திறப்புவிழாவும் நாளை மாலை திரு. சி. க. கணேசன் தலைமையில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் என். ரி. சம்பந்தர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

திருவாளர்கள் ஆ. தியாகராசா, ஆ. நடராசா, ந. சபாரத்தினம், மு. திருநீலகண்டசிவம், வ. பொன்னம்பலம், செல்வி மா. தம்பையா ஆகியோர் உரை நிகழ்த்துவர். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி நம்பியார் தங்கவேலு நடித்த
ஹரிச்சந்திரா

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கே ஆர் விஜயா நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி நடித்த
திருடன்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி - சாவித்திரி நடித்த

வெற்றிகரமான 3 வது மாதம்
கெப்பிட்டல் (கொழும்பு)
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி.ப 3-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய ஜனாதிபதியின் பிராந்தியப்பரிசு பெற்ற வெற்றிச்சித்திரம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தன் 2028

காணி

5 பரப்பு காணி விலைக்கு இருக்கிறது. சகல வசதிக்கும் உட்பட இருபாலை சந்திக்கு அண்மையில் முழு விபரமும் 'உடையார் வளவு', கோண்டாவில் ரேட், இருபாலையில் பெற்றுக்கொள்ளவும். 2030

3 குதிரைப் பவர் உள்ள பெற்றர் டீசல் இஞ்சின், தண்ணீர்ப் பம்புடன் விற்பனைக்குண்டு. கா. இராசநாயகம், அம்பிகை வாசா, ஆங்கிலப்பாடசாலைக்கு அருகாமையில், சண்டிலிப்பாய். 2032



வடபகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர், ஜெயவர்த்தன சுன்னுகம் இராமநாதன் இசைக்கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு இசைக்கலைஞர்களுக்குப்பட்டங்களை வழங்கினர். நாவற்குழி மகாவித்தியாலய இசையாசிரியை திருமதி கமலம் மகாலிங்கம் (பவானி) அமைச்சரிடமிருந்து 'சங்கீதரத்தினம்' பட்டத்தைப் பெற்றுக்கொள்வதைப் படத்தில் காணலாம்.

அறிவுரை உங்களுக்கு புதிய பாதையைக் காட்டும். குடும்பத்திலும் அன்பு தவழும்.

**கடகம்**- வாழ்க்கை புதிராக தோன்றும். ஆசாரக் குறைவுக்கு இடமுண்டு. சகோதரி ஒருவரின் பிரச்னை மனதிற்கு வேதனையைத் தரும். உள்வீட்டிலேயே உபத்[illegible]வங்கள் உருவாகலாம் அமைதிவேண்டும்.

**சிம்மம்**- தன்மானமிகுதிக்கும் தனவரவுக்கும் இ[illegible]முண்டு, சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும். குடும்பத்தில் தென்றல்வீசும். உறவினர்கள் படையெடுத்து வருவார்கள். கல்வியில் முன்னேற்றம் உண்டு.

**கன்னி**- செய்தொழிலால் சிறப்பு கிடைக்கும். வழக்குவிவாரங்களில் வெற்றி உண்டு. நீண்டநாள் பிரச்னை இன்று நல்ல முடிவுக்குவரும். வெளிஇடத்தில் இருந்து மகிழ்ச்சியைத் தேடித்தரும் செய்தியும் கிடைக்கும்.

**துலாம்**- வயிற்றுக்கோளாறு தோன்றக்கூடும். உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும். வேவுகணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். நண்பர் ஒருவரிடம் மோதநேரிடலாம். அமைதி நன்று.

**விருட்சிகம்**- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு. பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர். காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும். புத்திரவழியாலும் மகிழ்ச்சி உண்டு.

**தனுசு**- சிரித்து பேசியவர்கள் இன்று சீறி விழுவார்கள். உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ளநேரிடும். சிலருக்கு பதவியேற்றமும் தடைப்படலாம்.

**மகரம்**- கலைஞர்கள் போற்றப்படுவார்கள். வெளியூர்களிலிருந்து அழைப்புக் கிடைக்கலாம். பிதாவழித் தனவரவுக்கும் இடமுண்டு. தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**கும்பம்**- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம், வணிகர்களுக்கு வியாபார விருத்தி உண்டு, சிலர் புதிய துறைகளில் முதலீடுசெய்வதற்கு விரும்புவார்கள். சிறப்பான தினம்.

**மீனம்**- புதிய வழிகள் மூலம் பொருள்வரவுக்கு இடம் உண்டு. சிலருக்கு பதவிஉயர்வும் கிடைக்கலாம். குடும்பத்தில் இனிமை தவழும். பிள்ளை ஒன்றின் கல்வியில் அதிக கவனம் செலுத்தப்படும். நல்லநாள்.


வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி - பத்மினி - சாவித்திரி
நடித்த
சரஸ்வதி சபதம்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிரிப்போயா, போயா 2-30
ஜெமினி-சாவித்திரி
நடித்த
கொஞ்சும் சலங்கை

MANOHARA
JAFFNA
Daily 4-45, 7&9-45 p m.
Paul Newman
in
COOL HAND LUKK
(Scope-color)

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m.
Poya, Prepoya 4 shows
David Niven,
Faye Dunaway
in
THE EXTRAORDINARY
SEAMAN
(Metro color)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப்பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





சிவாஜிகணேசன் - பத்மினி
பாலையா, நாகேஷ், நம்பியார்
ஏ. வி. எம். ராஜன் மனோரமா
மற்றுபலர் நடித்த
சிவாஜிகணேசன் அளிக்கும்
தில்லானா மோகனம்பாள்

இப்பொழுது காண்பிக்கப்படுகின்றது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை)
ஆகிய திரைகளில்
முத்துராமன், புஷ்பலதா, நாகேஷ்
ஜெயபாரதி, நம்பியார், ஏ, கருணாநிதி
நடித்த
கே. எஸ், கோபாலகிருஷ்ணனின்
சுபதினம்

வெடிப்பு நோய், எரிவந்தம்,
கபிலப்புள்ளி நோய், மடல் நோய்
மற்றும் நெற் தொற்று
நோய்களை நீக்கச்
சிறந்த வழி
செரசான்




BAYER

நெல் விதைகளை மட்டுமன்றி மிளகாய் விதைகளையும் பாதிக்கும் மிளகாய்க் குருமன் போன்ற நோய்கள் விளைச்சலைப் பாதிக்கும். இந்த விதைத் தொற்று வியாதிகளை விரைந்தகற்றச் சிறந்த புதிய சேதன இரசம் கொண்டது செரசான் காளான் நாசினி.

செரசான் எவ்வித விதைகளுக்கும் ஏற்றது. செரசான் கொண்டு பரிகரித்த விதைகள் ஒரு நோயுமற்று ஓங்கி வளர்ந்து பெரு விளைச்சலைத் தரும்.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - செரசான், அது, களவு செய்ய முடியாத பக்கெட்டில் கிடைக்கும்.

உற்பத்தியாளர்:
பேயர்
லீவர்கூசன்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் விநியோகஸ்தர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

P-9159



யாழ். வின்ஸர் வெண்திரையில்
புத்தாண்டுப் பரிசாக திரையிடப்படுகிறது!
தினசரி 4 காட்சிகள்
★ நடிகர் திலகம் சிவாஜி கணேசன்
★ பாரதி ★ மனோகர்
★ வெண்ணிற ஆடை நிர்மலா
★ ஓ. ஏ. கே தேவர் ★ ஹரி கிருஷ்ணன்
முதலியோர் நடித்த
ஈ. வி. ஆர். பிக்சர்ஸ் அளிக்கும்
தங்கச் சுரங்கம்
(முழு நீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32 அரபுப்பள்ளி குழந்தைகள் பலி

## எகிப்து பாடசாலை மீது இஸ்ரேலியர் குண்டு வீசினர்

கெய்ரோ, ஏப். 9

**பாடசாலைப் பிள்ளைகள் 32 பேரை இஸ்ரேலியர் கொன்று குவித்துவிட்டதாக ஐக்கிய அரபுக் குடியரசு குற்றஞ் சாட்டியிருக்கின்றது.**

**இஸ்ரேலிய போர்விமானங்கள் எகிப்திய பள்ளிக்கூட மொன்றின்மீது குண்டுகள் வீசியதாகவும் இதனுல் 32 பிள்ளைகள் பலியானதுடன் 40 பேர் வரை காயமடைந்ததாகவும் ஐக்கிய அரபுக் குடியரசு அதிகாரிகள் கூறினர்கள்.**

இஸ்ரேலியரின் குண்டுவீச்சுக்கு இலக்கான பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்ப்பதற்கு வெளிநாட்டுப் பத்திரிகை நிருபர்கள் அனுமதிக்கப்பட்டனர். வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் அங்கு சென்றபோது சிதைந்த நிலையில் கிடக்கும் சிறுவர் சிறுமியரின் சடலங்களை அவர்கள் பார்த்தனர். கொல்லப்பட்டவர்களில் பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவரும் அடங்குவார் என்று கூறப்பட்டது.

பள்ளிக்கூடப் பிள்ளைகள் முன்றலில் விளையாடிக் கொண் ந்தபோது இந்தத் தாக் டைபெற்றதாம் காயம த பிள்ளைகளுக்கு சிகிச சயளிப்பதில் டாக்டர்கள் பரபரப்போசி ஈடுபட்டிருப்பதை நிருபர்கள் பார்த்தனர்.

கெய்ரோவிலிருந்து சுமார் 70 கிலோ மீட்டர் தொலைவில் சூயஸ் கால்வாயின் மேற்குக்கரையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

### தயான் மறுப்பு

இஸ்ரேலியர் அரபுப் பள்ளிக்கூடம் ஒன்றின்மீதுவிமானத் தாக்குதல் நடத்தினர்கள் என்பதை இஸ்ரேல் பாதுகாப்புஅமைச்சர் ஜெனரல் தயான் மறுத்திருக்கிறார் இஸ்ரேலிய விமானங்கள் எகிப்திய ராணுவ நிலையங்கள் மீது மட்டுமேகுண்டுவீசியதாகவும், இந்தச் சிறுவர்கள் ராணுவ நிலைகளில்இருந்திருக்கலாம் என்றும், இவ்வாறு சிறுவர்களை ராணுவ நிலைகளுக்குள் வைத்திருந்த தின்மூலம் எகிப்தியர்பெரும் தவறு புரிந்திருக்கிறார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

எகிப்திய ராணுவ நிலைகள் மீது குண்டுவீசுவதற்கு முன்னரும் பின்னரும் எடுக்கப்பட்ட படங்களை அதிகாரியொருவர் நிருபர்களிடம் காட்டினர்.

### முஸ்லிம் நிரந்தர செயலகம்

ஜட்கா மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டபடி அமைக்கப்படவிருக்கும் முஸ்லிம் நாடுகளுக்கான நிரந்தர செயலகத்தில் ஐக்கிய அரபுக் குடியரசு கலந்துகொள்ளாது என்று எகிப்தியர் அறிவித்துள்ளனர் ஜட்டா மாநாட்டின் உணர்ச்சிகளை வரவேற்கும் அதே சமயம் சமயத்தின் அடிப்படையில் நிறுவனம் ஒன்று ஏற்படுவதை விரும்பவில்லையென்று அவர்கள் தெரிவித்துள்ளனர். இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருககடி சமயத்துக்கும் அப்பால் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

## தலை மயிரில் இரசாயன உரம்

சென்னை, ஏப்ரல் 9

முடி திருத்தும் தொழிலாளர் கழிக்கின்ற, டோபா தயாரிப்பதற்குத் தகுதியற்ற மனிதத் தலைமயிரைக் கொண்டு பயிர்களுக்கும், தோட்டங்களுக்கும் பயன்படக்கூடிய உரத்தைத் தயாரிக்கும் முறையை மத்திய தோல் ஆராய்ச்சிக்கழகம் கண்டுபிடித்திருக்கிறது.

இன்னும் மனிதத் தலைமயிரைத் துணிகள் தயாரிப்பதற்கான செயற்கைநூலுடன் உபயோகப்படுத்தவும் இக்கழகம் முயன்றுவருகின்றது.

— —

## லண்டனில் இலங்கை அதிகாரிகள்

லண்டன், ஏப். 9

சமீபத்தில் லண்டனில், "நிதியும் பொருளாதார அபிவிருத்திக்கான, வளங்களும்" என்றவிடயம் பற்றிய கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது ஐந்துகிழமைகள் தொடர்ந்து நடைபெற்ற இக்கருத்தரங்கில் பங்குபற்றவென இரு சிரேஷ்ட இலங்கை அரசாங்க அதிகாரிகளும் சென்றிருந்தனர். கூட்டுறவுச் சங்கங்களின் உதவி ஜெனரல் மனே

## யூறி ககாரின் நூதனச்சாலை



மாஸ்கோ. ஏப்ரல் 9

உலகின் முதல் விண்வெளி வீரர் யூறி ககாரின் ஞாபகார்த்த மியூஸியம் ஒன்று காகாரின் பிறந்த நகரத்தில், அவர் தமது பால்யப் பருவத்தையும், வாலிபப் பருவத்தையும் கழித்த வீடொன்றில் திறந்துவைக்கப்பட்டது.

விண்வெளி வீரரின் பெற்றோர், அவரது சகோதர, சகோதரிகள், மனைவியார், குழந்தைகள், விண்வெளி வீரர் ஜெர்மன் டிட்டோ ஆகியோரே கண்காட்சியை முதலில் பார்வையிட்டனர்.

## 16 புதிய பஸ்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்திற்கு 16 புதிய பஸ்கள் அனுப்பப்பட்டிருப்பதாக இ. போ. ச. அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

பிரயாணிகளின் குறையைத் தீர்ப்பதற்கு உடனடியாக யாழ்ப்பாண மத்திய டிப்போவுக்கு 50 புதிய பஸ்களை அனுப்புமாறு கோரும் தீர்மானம் ஒன்று மீசாலை பிரயாணிகள் சங்கக் [illegible] றில் நிறைவேற்றப்பட்டு இ. போ. ச. மேலதிகாரி

திடீர் மரணத்துக்குள்ளாகும்

## சிசுக்களைக் காப்பாற்ற புதிய வழி

லண்டன், ஏப். 9

திடீர்மரணமடையும்குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கான புதிய வழிவகைகளை டாக்டர்கள் கண்டுபிடித்திருப்பதாக இங்கிருந்து வெளியாகும் 'சண்டே ரைம்ஸ்' என்னும் பத்திரிகை தெரிவிக்கிறது.

இக்குழந்தைகளின் இதயத்தில் மின்சார ஓட்டமுள்ள சதைப்பகுதி பிறக்கும்பொழுதே முதிர்ச்சியடைவதால் குழந்தைகள் பிறந்து ஒரு மாதத்திற்குள் அவற்றின் இதயங்கள் பிழையாக இயங்க ஆரம்பித்துவருகின்றனவென்றும், சாதாரண நோய்கள் ஏற்படும்பொழுதே இதயத்துடிப்பு பாதிக்கப்படுவதாகவும், இவ்விபத்திலிருந்து குழந்தைகளைத்தடுக்க இதயத்துடிப்பை வலுப்படுத்தும் மருந்துகளைக் கொடுக்க வேண்டுமெனவும் அப்பத்திரிகை கூறுகிறது.

வடஅயர்லாந்தில் மர்ம மரணமடைந்த ஒரு மாதம் தொடக்கம் ஒன்பது மாதம் வரையான வயதுள்ள 162, குழந்தைகள் இதயங்களை அலபாமா பல்கலைக் கழகத்தைச்சேர்ந்த இருதயநோய் நிபுணர் டாக்டர் தொமஸ் ஜேம்ஸ் ஆராய்ச்சிசெய்தபொழுதே மேக்கண்ட தகவல்களைக் கண்டுபிடித்ததாகவும் சண்டே ரைம்ஸ் தெரிவிக்கிறது.

## 'நாட்டின் முன்னேற்றத்துக்கு தகுந்த கல்வி அவசியம்'

— ஏ. பீரிஸ்

பதுளை, வியாழன்

'விஞ்ஞான உலகில் இன்று நாம் வசித்துக் கொண்டிருக்கிறோம். முன்னேற்ற மடைந்த மற்றும் நாடுகளோடு சமமாகவும் முன்னேற்ற மடைந்ததாகவும் நமது நாடு விளங்கவேண்டுமானல் நாட்டிலுள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் நல்ல கல்வியளிக்க வேண்டும்.

பதுளை விசாக மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற அடிக்கல் நாட்டுவிழா வைபவத்தில் உரையாற்றிய வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எஸ். ஏ. பீரிஸ் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கல்வியின் முக்கிய நோக்கம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பது மட்டுமல்ல அயலாரை அன்பாகவும் மரியாதையோடும் நேசிக்கத்தக்க நல்லொழுக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதும் பிரதான நோக்கமாகும்தற்போதையமாணவர்கள் தமததிகாரிகளை மதிப்பவர்களாகவில்லை. கல்வியின்தரமும்குறைந்துள்ளது. மாணவர் நலன் கருதிப் பூரணமாக அவர்களின் சேவைக்கு அர்ப்பணிக்கும் ஆசிரியர்களை நியமித்து மாணவர்களுக்கு நல்ல முறையில் கல்வி பயிற்ற வேண்டும். அப்போதுதான் கல்வித்துறையில் தற்போதேற்பட்டுள்ள வீழ்ச்சி நீங்கும் என்று கூறினர்.

மேற்படி கல்லூரியின் புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டிய கல்வி உதவிமா அதிபர் திரு. டி. எம். ஹெட்டியாராச்சி பேசுகையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் கவனம் செலுத்த

## நிலத்தடிவிபத்தில் 88 பேர் பலி


டோக்கியோ, ஏப் 9

ஜப்பானில் நிலத்துக்கடியில் ஏற்பட்ட விஷவாயுக் கசிவொன்றின் காரணமாக 88 பேர் பலியாகியிருக்கிருர்கள். சுமார் 300 பேர் வரை காயமடைந்திருப்பதாகவும் தெரிகின்றது.

இந்தவிபத்து ஒஸாக்கா நகரில் இடம்பெற்றது. சுமார் 70 பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்

## "தமிழ்இனத்தின் சுபீட்சமே தமிழரசின் லட்சியம்"

— வட்டுக்கோட்டை அமிர்



மாவிட்டபுரம் வியா

"தேர்தலில்வெற்றி பெறுவது எமது கட்சியின் நோக்கமல்ல. தமிழினம் சுபீட்சமாகவாழவேண்டுமென்றஇலட்சியத்தை முன்வைத்தே இதுகாலம்வரை நாம் போராடிவருகின்றோம். இனியும் போராடவிருக்கிறோம்."

இவ்வாறு மாவிட்டபுரம் தமிழரசுக் கிளைக்காரியாலயத்திறப்பு விழாவில் கலந்துரையாற்றுகையில் வட்டுக்கோட்டை முன்னாள் எம் பியும் (தமிழரசுக் கட்சி செயலாளருமான திரு. அ அமிர்தலிங்கம் கூறினர்.

திரு. வ. மாப்பாணர் தலைமையில் திங்கட்கிழமையிரவு நடந்த இத்திறப்பு விழாவில் திரு. அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

தமிழரசுக் கட்சியை எந்த சிங்களக் கட்சியாவதுநேரடியாகத் தாக்கவில்லை. தமிழ் காங்கிரஸ் கட்சிதான் யு. என். பி.யின் ஆதரவில் தமிழரசை எதிர்த்து வருகிறது

தமிழ் காங்கிரஸ்கட்சியை கூடிய பெரும் பான்மையாக அனுப்பிய காலத்தில் தமிழ் மக்கள் சுபீட்சமாக வாழ்ந்தனர். தமிழரசுக்கட்சியை பெரும்பான்மையாக அனுப்பியதால் தமிழ் மக்கள் பாதிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என அபாண்டமான வார்த்தையை தமிழ் காங்கிரஸ் தலைவர் கூறியிருக்கிறார். அவர்களை பெரும்பான்மையாக அனுப்பிய போதுதான்தமிழ் மக்களைபாதிக்கக் கூடிய விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டன இதையடுத்து எமது கட்சியைபெரும் பான்மையாக அனுப்பியபோது நாம்முதல் சென்றபோதுதான் சிங்களக் குடியேற்றம் தனிச் சிங்களச்சட்டம் ஆதியன தலைதூக்க ஆரம்பித்தன.

சிங்களச்சட்டத்தை எதிர்த்து நாம் நடத்திய போராட்டத்தின் பயனைகத்தான் இன்று தனிச்சிங்களச் சட்டத்தை வட-கீழ் மாகாண அலுவலகங்களில் அரசு நடைமுறைப்படுத்த முடியாததற்கு காரணம்.

—

## சித்தி பெற்றோர்

கொழும்பு, புதன்

1969-ம்ஆண்டு மார்கழி மாதம் நடைபெற்ற நிர்வாகப் படிப்பு அகடமியின் பொது நிதி நிர்வாகஇறுதித் தேர்வில் சித்தி பெற்றோர் விபரம் வருமாறு:

1 திரு எஸ் கனகசுந்தரம் 2 திரு கே முருகேசு 3 திரு என் பேரம்பலம் 4 திரு வி சிவசுப்பிரமணியம் 5 திரு வி தர்மலிங்கம் 6 திரு வி தர்மலிங்கம் (சிரேஷ்டர்) 7 திரு கே இ திருநாவுக்கரசு 8 திரு பி தொமஸ் 9 திரு டபிள்யூ ஏ வாஸ் 10 திரு எஸ் விநாயகமூர்த்தி 11 திரு ஏ எம் அபயரட்ன 12 திரு டபிள்யூ எ டி அல்பிஸ் 13 திரு எஸ் எம் ஜே இமானுவேல் 14 திரு டபிள்யூ ஜே பி பெர்னுன்டோ 15 திரு டபிள்யூ எம் எம் ஜெயவீர பண்டார 16 திரு ஜி எஸ் பள்ளவெத்த 17 திரு எஸ் ராஜபக்ஸ 18 திரு எச் எம் ஏ சமரவீர

இதோ!
ரேமியா
பரவசமூட்டும்
ஓர் புதிய
பவுடர்!

கருத்தடை

கல்வி அதிபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரல் தயான் மறுத்திருக்கிறார் இஸ்ரேலிய விமானங்கள் எகிப்திய ராணுவ நிலையங்

யத்துக்கும் அப்பால் முக்கியத்துவம் வாய்ந்தது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

கருத்தடை

# அறுவைச் சிகிச்சை ஆண்களுக்கு உகந்ததா?

## அமெரிக்க விஞ்ஞானி தரும் விளக்கம்

புதுடில்லி, ஏப்ரல் 9

கருத்தடைக்காக அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் ஆண்கள் மனோதத்துவ ரீதியிலும் உணர்ச்சி ரீதியிலும் பாதிக்கப்படுவதாக அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் தமது கட்டுரையில் கூறுகிறார்.

அமெரிக்க வைத்திய சங்கத்தின் கீழ் நூற்றுக்கணக்கான ஆண்களின் உடல் நிலையை அறுவைச் சிகிச்சைக்கு முன்பும், அறுவைச் சிகிச்சைக்குப் பின்பும் பரிசோதித்துவரும் இந்த விஞ்ஞானி 'ருடேஸ் ஹெல்த்' என்ற பத்திரிகைக்கு எழுதியுள்ள கட்டுரையில் அறுவைச்சிகிச்சை செய்துகொள்பவர்களில் பெரும்பாலான ஆண்கள் தாம் ஆண்மைத் தன்மையை இழந்துவிடுவதாக நினைப்பதாலேயே அதிக கோளாறுகள் ஏற்படுவதாகவும், அதேவேளையில் தைரியமாகச் செய்து கொள்ளும் ஆண்களுக்கு கோளாறு இல்லையென்றும் சொல்லமுடியாதென்றும் தெரிவிக்கிறார்.

பாடசாலைகளுக்காக

# எடின்பரோ கோமகன் எடுத்துள்ள படம்

லண்டன், ஏப்ரல். 9

பாடசாலைகளில் பயன்படுத்துவதற்கான படம் ஒன்றை எடின்பரோ கோமகன் தயாரித்திருக்கிறார்.

'ஒரு சிறு ராக்கெட், மணிக்கு 90 மைல் வேகத்தில் பறந்து செல்கிறது: அதனை அமைத்த மாணவர்கள் நிலத்திலிருந்து அதன் வேகத்தைக் கட்டுப்படுத்துகிறார்கள்'- இது ஒரு படத்தின் காட்சியாக இருப்பினும் உண்மையாக நடைபெற்ற சம்பவமே. பிரிட்டனில் இருக்கும் 8,000 மத்திய பாடசாலைகளுக்கும், கைத்தொழிலுக்குமிடையே தொழில்நுட்ப 'பாலம்' ஒன்றை அமைப்பதில் தீவிரமாக முன்னிற்பவரான இரண்டாம் எலிஸபெத் மகாராணியின் கணவரான எடின்பரோ கோமகன் இந்தப் படத்தை எடுத்திருக்கிறார்.

பாடசாலை விஞ்ஞான, தொழில்நுட்ப கமிட்டியின் தலைவரான கோமகன் தான் மேற்கூறிய படத்தையும் எடுத்திருக்கிறார். மாணவர் தம் சாதாரண பொதுக் கல்வியுடன், தம் சொந்த விஞ்ஞான திட்டங்களைச் செயல்படுத்த, பிரிட்டனிலுள்ள கல்வி, கைத்தொழில் கம்பனிகளும், நிறுவனங்களும் சந்தர்ப்பம் அளிக்க முன்வரவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக்காட்டு முகமாகவே இப் படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

ஏற்கனவே, பிரிட்டனில் ஏழு பிரதேசங்களிலுள்ள கைத்தொழில் நிறுவனங்கள், பாடசாலை விஞ்ஞான நிலையங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. இங்கு மாணவர் தம் விஞ்ஞானத் திட்டங்களைச் செயல் படுத்துவதையும் படம் சித்தரிக்கிறது. மேலும், எடின்பரோ கோமகன் இம் மாணவர்களுடன் அளவளாவி அத்திட்டங்களை அவர்கள் மூலம் அறிவதையும் படத்தில் காணலாம்.

இத்திட்டங்களின்படி, மாணவர், தமது பாடசாலை நேர சஞ்சிகையின்படி படிப்பதுடன், தான் படித்தவற்றை இந் நிலையங்களில் செயல்படுத்த முனைகின்றனர். தமக்குத் தேவையான சாதனங்களையும், கருவிகளையும் அவர்களே அமைக்கின்றனர். சிறு ராக்கெட் மோட்டார்களை அமைத்துப் பரீட்சிப்பது, கைரேகை அடையாளங்களைத் தரம் பிரிக்கும் ஒரு நவீன சாதனத்தைஅமைப்பது, நைலோன் நூலிழையை மேலும் விருத்தி செய்வது, சிறுபடகுகளை அமைத்துப் பரீட்சிப்பது போன்ற பல வேலைகளை மாணவர்கள் வெகு உற்சாகத்துடன் செய்கின்றனர்.

'அறிவுக் களஞ்சியம்' என்ற பெயர் கொண்ட இப் படத்தை பிரிட்டனின் மத்திய தகவல் காரியாலயம் எடுத்திருக்கிறது. வெகு விரைவில் இது பிரிட்டனிலும், வெளி நாடுகளிலும் திரையிடப்பட விருக்கிறது.

பல நாடுகள், இப்பொழுது எடின்பரோ கோமகனின் தொழில்நுட்பத் திட்டத்தில் பெருமார்வம் காட்டி வருகின்றன. இப்படம் திரையிடப்பட முன்னரே தம் நாட்டுப் பாடசாலைகளில் விஞ்ஞான, தொழில் நுட்ப நிலையங்களை எப்படி அமைப்பது, நடத்துவது என்று பல வெளிநாட்டு விசாரணைகள் வரத்தொடங்கிவிட்டன என மத்திய தகவல் காரியாலயம் கூறுகிறது.

தொடர்ந்து நடைபெற்ற இக்கருத்தரங்கில் பங்குபற்றவென இரு சிரேஷ்ட இலங்கை அரசாங்க அதிகாரிகளும் சென்றிருந்தனர். கூட்டுறவுச் சங்கங்களின் உதவி ஜெனரல் மனேஜர் திரு ஜே எப். குரேயும் திறைச்சேரியின் திட்ட அளிப்புப்பிரிவின் உபதலைவர் திரு. எல். ரி. என். மெண்டிஸும் தான் இவ்விரு அதிகாரிகள்.

தென் இங்கிலாந்திற்கருகிலுள்ள ஸஸகஸ் சர்வகலாசாலையின் அபிவிருத்திக் கல்விகளுக்கான நிறுவனம் ஒழுங்கு செய்த இக்கருத்தரங்கில் இலங்கையர் உட்பட முப்பது வெளிநாட்டு உயர் அதிகாரிகள் பங்குபற்றினர்.

— —

## மக்களே தெரிவு செய்வர்

சென்னை, ஏப்ரல். 9

பஞ்சாயத்து தலைவர்களை பஞ்சாயத்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுப்பதை விடுத்து மக்களைக் கொண்டே பஞ்சாயத்து தலைவர்களை தேர்ந்தெடுக்கும் விதத்தில் திருத்த சட்டம் சட்டசபையில் நேற்று முன்தினம் நிறைவேற்றப் பட்டுள்ளது.

பஞ்சாயத்துத் தேர்தல் ஜுலை மாதத்தின் இறுதி வாரத்தில் நடைபெறுமென்று அமைச்சர் முத்துசாமி கூறினார்.

— —

## மது கடத்திய 28 பேரை சுட்டுத்தள்ளினர்

தெஹ்ரான் ஏப். 9

ஈரானில் மதுவகைகள் கடத்தலில் ஈடுபட்டிருந்தவர்கள் 28 பேர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிறார்கள். லாகிரிப் பொருட்களைக் கடத்துகிறவர்கள்மீது கடும் நடவடிக்கைகளை ஈரான் அரசு எடுத்துவருகின்றது. இப்பொருட்களைக் கடத்துபவர்களை ஸ்தலத்திலேயே அதிகாரிகள் சுட்டுத்தள்ளுகிறார்கள்.

தியா[illegible] டிப்போவுக்கு 50 புதிய பஸ்களை அனுப்புமாறு கோரும் தீர்மானம் ஒன்று மீசாலை பிரயாணிகள் சங்கக் கூட்டமொன்றில் நிறைவேற்றப்பட்டு இ. [illegible]. ச. மேலதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டது.

— —

## "பலியிடுதல் முறை முற்றாக நீக்கப்படவேண்டும்"

சுழிபுரம், வியா.

"யாழ்ப்பாணக் குடாநாட்டில் பலவேறு இடங்களிலுள்ள சைவ ஆலயங்களில் நடைபெற்று வந்த மிருக பலியிடும் முறை முற்றாக குறைந்து கொண்டு வருகின்றது. இன்னும் சிலகோவிலில் நடைபெறும். இப்பாவச் செயல் முற்றாக நிறுத்தப்பட வேண்டும். வாழப்பிறந்த உயிர்களை, நாம் வாழவிடாது வதைப்பது- கொலை செய்வது பெரும் பாவமாகும். ஆண்டவன் விரும்புவதாக கூறி சிலகருமங்களைச் சிலர் செய்து வருகின்றனர். இறைவனுக்கு நாம் வழங்க வேண்டியது-அவர் விரும்புவது-அன்பு ஒன்று தான்" என்று சுழிபுரம் காளுவன் வயிரவ சுவாமி கோவிலில் நடைபெற்ற பொங்கல் விழாவிற்கு தலைமை வகித்துப் பேசிய முதலியார் செ. சின்னத்தம்பி கூறினார். புலவர் நா. சிவபாதசுந்தரனார் விழாவை ஆரம்பித்து வைத்தார்.

## உற்சவம்

தாவடி, வியா.

தாவடி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 7-ம்திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. சித்திரைப்பௌர்ணமி தினத்வன்று தீர்த்தோற்சவத்துடன் திருவிழா பூர்த்தியாகும்.

— —

## கோயில் உடைத்து திருட்டு

சித்தன்கேணி வெள்ளி

சித்தன்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோவில் ஆதிமூல விக்கிரகத்தின். சுமார் 5 பவுண் பெறுமதியான தங்கத்தாலான இயந்திரத் தகடு, கதவு உடைத்துத் திருடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. இத்திருட்டுச் சம்பவம் நேற்று முன் தினமிரவு நடைபெற்றுள்ளது.

இதுபற்றிக் கோயில் நிர்வாகிகள் சங்கா[illegible]ப் பொலிஸில் புகார்செய்துள்ளனர். இத்திருட்டுச் சம்பந்தமாக பொலிஸார் புலன்விசாரணை செய்கின்றனர். இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

சுமார் 300 பேர் வரை காயமடைந்திருப்பதாகவும் தெரிகின்றது.

இந்தவிபத்து ஒஸாக்கா நகரில் இடம்பெற்றது. எக்ஸ்போ 70 பொருட்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் இடத்துக்கு சுமார் 12 மைல் தொலைவில் இந்த விபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த விபத்தில் பலியானவர்களில் பெரும்பாலானோர் பெண்களும் குழந்தைகளுமாவர். இந்த விபத்தில் பலியானவர்களின்தொகை 70 என்று ஓர் அறிக்கைகூறுகின்றது.

அப்பலோ-13

## மீண்டும் பிரச்னை

கென்னடிமுனை ஏப். 9

அப்பலோ-13 செலுத்தப்படுவதில் மீண்டும் பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது. வீரர்களில்ஒருவருக்கு தொற்றுநோய் தடுப்புச் சக்திபோதாது என்பதே இதற்குக் காரணமாம். இவரை மாற்றி பதிலாக ஒருவரைப் போடுவதிலும் சங்கடம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அப்பலோ-13 செலுத்துவதை நிறுத்துவதா இல்லையா என்பதுபற்றி இன்னும் திட்டவட்டமாக முடிவு செய்யப்படவில்லையென்று தெரிகின்றது.

## செனட்டில் நிக்ஸனுக்கு மீண்டும் தோல்வி

நியுயோர்க் ஏப் 9

அமெரிக்க சுப்ரீம் கோர்ட்டில் புதிதாக ஒருவரைநியமிப்பதக்கு அதிபர் நிக்ஸன் எடுத்த முயற்சி மீண்டும் தோல்வியடைந்திருக்கின்றது.

சில மாதங்களுக்கு முன் அதிபர் நிக்ஸன் சுப்ரீம் கோர்ட்டுக்கு நியமனம் செய்த ஒருவரை செனட் சபை அங்கீகரிக்க மறுத்தது. இப்பொழுது மீண்டும்அவர் சிபார்சு செய்த ஒருவரை செனட்சபை நிராகரித்து விட்டது. ஹெரால்ட் ஒஸ்வால்ட் என்ற இவர் இனவேறுபாடு கொள்கை உடையவர் என்றும் சுப்ரீம் கோர்ட்டில் இடம் பெறும் அளவுக்கு மேதாவிலாசமற்றவர் என்றும் செனட்சபை முடிவுசெய்துவிட்டது.

ளூர்.

மேற்படி கல்லூரியின் புதிய கட்டிடத்துக்கு அடிக்கல் நாட்டிய கல்வி உதவிமா அதிபர் திரு. டி. எம். ஹெட்டியாராச்சி பேசுகையில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் கவனம் செலுத்த வேண்டும். பாடசாலையில் அவர்கள் பிள்ளைகளுக்குத் தேவையானசகலஅறிவையும் பெறலாம் என எதிர்பார்க்கக் கூடாது. குறிப்பாக பெண்பிள்ளைகளுக்கு குடும்ப நிர்வாகத்தைப் பற்றி பெற்றோர்கள் தக்க அறிவு பெறச் செய்யவேண்டும்' எனக் கூறினார்.

பாடசாலை அதிபரும் மற்றும் பலரும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

— —

மேரிஜோ மரணம்

## விசாரணை முடிந்தது

நியுயோர்க், ஏப்ரல். 9

செல்வி மேரி ஜோவின் மரணம்பற்றி விசாரணை செய்த விசேஷ ஜுரிசபையினர் மேற்கொண்டு விசாரணையைத் தொடர வேண்டியதில்லை யென்று அறிவித்துள்ளனர். இதனால் இந்த விசாரணை முற்றுப்பெற்று விட்டதாகக் அரசாங்க தரப்பு வழக்கறிஞர் அறிவித்திருக்கிறார்.

செல்வி மேரி ஜோ செனட்டர் எட்வார்ட் கென்னடியின் காரில் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது கடந்த ஆண்டு ஜுலை மாதம் விபத்தொன்றில் மரணமானார்.

— —

## ஆசிரியர் சங்க 50-வது ஆண்டு விழா

கொழும்பு, வியாழன்

எதிர் வரும் ஜுலை மாதம் ஆசிரிய சங்கத்தின் 50-வது வருடாந்தவிழாவை நாடெங்கிலும் கொண்டாட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் ஞாபகார்த்தமாக புதிய முத்திரை ஒன்றை வெளியிடுமாறு ஆசிரியர் சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

50-வது ஆண்டு விழாவையொட்டி கல்வி வாரமொன்றையும் பிரதேச ரீதியாகச் சங்கம் கொண்டாடும். கல்வி வாரத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையில் கட்டுரை பேச்சு நாடகப் போட்டிகளையும், கருத்தரங்குகளையும் நடாத்தத் திட்டமிட்டுள்ளது. விழா மலர் ஒன்றும் வெளியிடப்படும்.

இன்று தனிச்சிங்களச் சட்டத்தை வட-கீழ் மாகாண அலுவலகங்களில் அரசு நடைமுறைப்படுத்த முடியாததற்கு காரணம்.

—

## கல்வி அதிபர் பாராட்டு

மாவிட்டபுரம், வியா.

"இவ்வித்தியாலயத்தில் மாணவர்இருந்து படிக்க போதிய கட்டடம்இல்லை. அதைவிட விளையாட்டுத் துறையில் விளையாட இடம் இல்லை. உடற்பயிற்சி ஆசிரியர்இல்லை. உபகரணங்கள் இல்லை. அப்படியிருந்தும்இவ் வித்தியாலயம் விளையாட்டு துறையில் முன்னணி வகிப்பது பாராட்டக்கூடிய விடயமாகும்"

இவ்வாறு காங்கேசன் துறை ஆங்கில மகாவித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டியில் கலந்து உரையாற்றிய வடபிராந்திய கல்விஅதிபர் திருமதி ஆர். எஸ். பாமர் கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு. பி. சச்சிதானந்தம் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது.

விக்னல் இல்லம் முதலிடத்தைப்பெற்று சாம்பியனாகியது. கென்மென், செல்லையா ஆகிய இல்லங்கள் 2ம் 3 இடங்களைப்பெற்றன.

—

## மீண்டும் நியமனம்

மாவிட்டபுரம், வியா.

கிராம சேவையாளராக இருந்து ஓய்வுபெற்றிருந்த ஒருவருக்கு மீண்டும் கிராம சேவையாளர் பதவி கிடைத்துள்ளது.

திரு. சு. மூத்ததம்பி என்பவர் கீரிமலையில் 22 வருடங்களாக கிராம சேவையாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றிருந்தார்.

இவர் இப்போது கரைச்சி காரியாதிகாரி பிரிவிலுள்ள வட்டக்கச்சி கிராம சேவையாளராக தற்காலிக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இதுசம்பந்தமாக யாழ். அரசாங்க அதிபர் இவருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் இவர் ஏப்ரல் 1ம் திகதி முதல் வட்டக்கச்சி கிராம சேவையாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

—

## சேர். ஜோன் எதிர்ப்பு

கோட்டை, விழா.

இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரி இரத்மலானை விமான நிலையத்தை மூடும் தீர்மானத்துக்குக் கண்டனம் தெரிவித்து போக்குவரத்தமைச்சருக்குக் கடிதம் ஒன்று எழுதியுள்ளார்.




பசுமையும், நீடிக்கும் சுகந்தமும கொண்ட ரோமியா விசேஷ முறையில் வாசனையூட்டப்பட்ட டால்க்.

மேலோங்கும் அழகுருவளிக்க உடலெங்கும் முகத்திலும் ரோமியா ஃபூவுக!

சிறப்பறிய, இன்றே ஒரு டின்

**ரோமியா**

வாங்குக!

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

விலை ரூ 2/10.

ஓர் ரெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

தன்னை ஆளத் தெரியாத ஒருவன் ஒருபோதும் பிறரை ஆளுவதில் வெற்றிபெறமாட்டான்.

— மகாத்மா காந்தி.


# ஈழநாடு

Eelanadu (National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 28-ந் திகதி (10-4-70)


## லத்தீன் அமெரிக்காவில் வன்முறைச் செயல்கள்

கௌத்தமாலா நாட்டில் கடமையாற்றிக்கொண்டிருந்த மேற்கு ஜெர்மன் தூதுவர் ஸ்பிரெடியை அந்நாட்டுத் தீவிரவாத கொரில்லாப்படையினர் வன்முறையில் கடத்திச் சென்று பயங்கரமாகக் கொலைசெய்த செய்தி, அனைத்துலகையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கௌத்தமாலாவில் உள்ள கொரில்லாப் படையினரிடம் பலியாகிய இரண்டாவது அன்னியத் தூதுவர்தான் ஸ்பிரெடி. 1968-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் அமெரிக்கத் தூதுவர் ஒருவரும், கொரில்லாப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்

1968-ம் ஆண்டு ஆரம்பத்திலோ, அமெரிக்க இராணுவ அதிகாரியொருவரும் கடற்படை அதிகாரியொருவரும், கொரில்லாப்படையினரின் வன்முறைச்செயல்களுக்குப் பலியாகினர்.

இப்படியாக, அண்மைக் காலங்களில் கௌத்தமாலா போன்ற தென் அமெரிக்க - லத்தீன் அமெரிக்க நாடுகளில் பயங்கரவாதிகளின் வன்முறைச் செயல்கள் நாளாந்தம் அதிகரித்து வருவதை அனைத்துலகிலும் உள்ளோர் அச்சத்துடன் நோக்கிவருகின்றனர்,

நூற்றுக்கணக்கான பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் விமானங்களை, வன்முறைச் செயல்களைப் பயன்படுத்தி வழிமறித்து, நாடு கடத்தும் படுமோசமான செயல்கள் நாளாந்த நிகழ்ச்சிகளாக மாறிவிட்ட கோரத்தையும் நாம் காண்கிறோம்.

பிரேஸில் நாட்டில், அமெரிக்க தூதுவரை துப்பாக்கி முனையில் கடத்த முயற்சித்துத் தோல்விகண்டுள்ளனர் பயங்கரவாதிகள்; தலைக்குவந்தது தலைப்பாகையோடு போயிற்று. என்பதுபோல் தோளில் பட்ட குண்டுக் காயங்களுடன் அவர்களிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார் பிரேஸில் நாட்

வார்த்தை நடாத்தவிருக்கிறார்.

அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸனும், லத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசோச்சும் வன்முறைச்செயல்களைக் கட்டுப்படுத்தி, அவற்றிற்கு முடிவுகட்ட தீர்க்கமான திட்டம் ஒன்றைத் தயாரித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே இன்றைய சர்வதேச அரசியற்சூழ்நிலையில், இவ்விரு தலைவர்களின் சந்திப்பு லத்தீன் அமெரிக்க நாடுகளின் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கும் வன்முறைச் செயல்களுக்கு முடிவுகட்டி, நாகரீகமான அரசியல்வாழ்வு அந் நாடுகளிலும் நிலவ வழி வகுக்கும் என எதிர்பார்க்கலாம்.

லத்தீன் அமெரிக்க நாடுகளிலே இப்படியான வன்முறைச்செயல்கள் அடிக்கடி நடைபெறுவதற்கான நோக்கங்கள் பற்றி நாம் ஆராய வேண்டியது அவசியமில்லை.

ஏனெனில், நோக்கங்கள் எவ்வளவு தூய்மையானவையாக - நன்மையானவையாக இருந்தாலும், அவற்றை நிறைவேற்றக் கையாளப்படும் முறைகள் - வழிமுறைகளும் தூய்மையானதாகத்தான் இருக்க வேண்டும் என்பதுதான் ஆள்வோர் எமக்குக் கற்றுத் தந்துள்ள பாடம். எனவே பயங்கர வாதிகளினதும், கொரில்லாப் படையினரதும் நோக்கங்கள் எவ்வளவுதான் உயர்ந்தவையாக - நல்லவையாக இருந்தாலும் கூட அவற்றையடைய அவர்கள் கடைப்பிடிக்கும் இப்படியான பயங்கரவழிகளுக்கு உலகமக்கள் ஒருக்காலும் ஒப்புதல் அளிக்கமாட்டார்கள்.

வன்முறைச்செயல்களுக்கு ஊக்கம் ஊட்டி, வன்முறைகளைப் பயன்படுத்தியே ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரத்துக்கு வருகின்றவர்கள் கூட, நாளடைவில் அவர்களைவிட வலிமைமிக்கோரின் வன்முறை ந...

### ஆட்சி மன்றத்தில் சாதித்தது என்ன? [5]

# பத்தாயிரம் மக்களின் தண்ணீர் தாகம் தீரப்போகிறது!

தமிழ் மக்களின் பிரதிநிதிகள் ஆட்சிமன்றத்தில் சாதித்தது என்ன? என்ற இந்தத் தொடரில் இன்று இரு பெரும் தமிழ்க்கட்சிகளில் ஒன்றான தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாக உடுப்பிட்டித் தொகுதிககுத் தேர்ந்தெடுககப்பட்ட திரு. மு. சிவசிதம்பரத்தின் பேட்டி இடம்பெறுகிறது

திரு. சிவசிதம்பரத்திடம் வாசகர்கள் கேட்க விரும்பும் கேள்விகளை 17-ம் திகதிககுமுன் எமககுக கிடைகக அனுப்பிவையுங்கள்



'உடுப்பிட்டிச் சிங்கம்' என்று கூறினுல்போதும் சிறு குழந்தையும் திரு. எம் சிவசிதம்பரம் தான் என்று உணர்ந்துகொள்ளும் கடந்த 5 ஆண்டு கால அரசியல் வரலாற்றில் அகில இலங்கையிலும் தனிச் சிறப்பு வாய்ந்த ஓர் அரசியல் பிரமுகராகக் கருதப் பட்டுவரும் இந்த உடுப்பிட்டி 'சிவா' பேச்சில் எப்படியோ அதுபோல் செயலிலும் வல்லவர். சொன்ன காரியத்தைச் செய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்.

அரசியல்வாதியாக இருந்துவிட்டால்மட்டும் போதுமா? குடும்பம் என்ற ஒன்று இருக்கின்றதே அதனைக் காப்பாற்ற வேண்டாமா என்று புன்சிரிப்புடன் எம்மிடமே திருப்பிக் கேள்வி விடுக்கும் இவர் வழக்கறிஞர் தொழில் மூலம் தனது குடும்பத்தைக் காப்பாற்றுகிறார்.

பேட்டி: எம். சிவசிதம்பரம்

(முன்னுள் உடுப்பிட்டி எம். பி.)

நிருபர்: ஜே. ஜெயக்குமார்

கரவெட்டி கிழக்கிலுள்ள இவரது வாசஸ்தலத்திற்குச் சென்றுல் எம். பி.யின் வீடு எங்கேயென்று கேட்கவேண்டியதில்லை. வரிசையில் நிற்கும் கார்களும், சைக்கிள்களும் பதில் சொல்லிவிடும் ஆனுல் எம். பி யின் வீடு, அதுவும் ஓர் உப-சபாநாயகரின் வீடு இதுதானு என்று வியப்பு மேலிடும். விருந்தையின் தட்டி அடிக்கப்பட்ட பகுதியில் ஒரு மேசை அதற்குச் சுற்றிவரக் கதிரைகள். மேசைக்கு முன்பாகக் கம்பீரமான ஓர் உருவம், மேல் துணி எதுவுமின்றி வெள்ளைச் சாரத்துடன் காட்சியளிக்கும்.

வருவோரை அண்ணை வாருங்கோ, தம்பி வாருங்கோ என்று அன்புடன்

அபிவிருத்திகள் செய்ய முடிந்தது'' என்று ஆரம்பித்து ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

#### ஒத்துழைத்தேன்

1960ம் ஆண்டு முதல் 1965ம் ஆண்டுவரை நான் எதிர்க்கட்சியில் இருந்தேன். அந்நேரத்தில் தமிழினத்திற்கு முக்கிய பிரச்சினைகள் எதிர்நோக்கி இருந்தபடியால் அச்சமயம் தமிழரசுக் கட்சியினருக்கு எனது ஆதரவைக் கொடுத்தேன். தமிழரு[illegible]டைய ஒற்றுமையை இந்நாட்டில் வாழும் மக்களுக்குக் காட்டவே நான் தமிழரசுக்கட்சியினருடன் ஒத்துழைத்தேன்.

அன்றைய அரசாங்கத்தை நாம் ஒருமனதாக எதிர்த்தாலும், தமிழ்மக்களையும்,

லையிலிருந்து மீளமுடியாது தத்தளிக்கும் முன்னுள் உபசபாநாயகர் சிகரெட்டை ஊதித் தள்ளிக்கொண்டே எனது பேட்டிக்குத் தயாரானுர்.

நான் கேள்விகள் கேட்கும்போது அவரது நெற்றிப் புருவங்கள் ஏறியிறங்கும், தீவிர சிந்தனையுடன் அமைதியாக ஆனுல் ஆழமான பதிலைத் தந்தார்.

கடந்த 5 ஆண்டுக் காலத்தில் நீங்கள் தொகுதிக்குச் செய்த தொண்டுகளைக் கூற முடியுமா என்று கேட்டேன்.

''ஓ தாராளமாகக் கூறலாம்! எனது பத்தாண்டு கால ஆட்சிமன்ற வாழ்வில் கடந்த ஐந்தாண்டு காலமாகவே தொகுதிக்கு என்னுல்

முழுது எனது தொகுதிக்கான அபிவிருத்தி வேலைகளைச் செய்யமுடியாது போய்விட்டது.

1965ம் ஆண்டிற்குப் பின்னர் தேசிய அரசாங்கத்தை ஆதரித்து. அந்த அரசாங்

## புதிய காரியாதிகாரி பிரிவை நிறுவினேன்

கத்தில் அங்கம்வகித்ததால் தொகுதிக்குத் தேவையானவைகளைப் பூர்த்திசெய்ய முடிந்தது.

இந்த முன்னுரையை அடுத்து முன்னுள் உப-சபாநாயகர் தனது சேவைகளை விபரித்தார்.

#### பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டம்

கடந்த ஐந்தாண்டு காலத்தில் எனது தொகுதியில் பிரமாண்டமான அபிவிருத்தித் திட்டமெனக் கரவெட்டி அத்துளு [illegible] குழாய்நீர், நீர்ப்பாசன [illegible]நியோகத் திட்டத்தைக் கூறுவேன். இத்திட்டத்திற்கென 7 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தண்ணீர்ப் பஞ்சமான பகுதிகளில் [illegible]

அமைச்சர் என்னிடம் உறுதி அளித்துள்ளார்.

#### பாடசாலைகளை முன்னேற்ற..

எனது தொகுதிப் பாடசாலைகள் விஷயத்தில் நான் பெரிதும் கவனம் செலுத்தினேன். பின்தங்கிய பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கெனவும், புதிய கட்டிடங்கள் நிறுவவும் அரசாங்கத்திடமிருந்து பணம் பெற்றுக்கொடுத்தேன். புலோலியில் ஓர் உயர்தரக் கல்லூரி இல்லாத குறையைப் புற்றளைப் பாடசாலையை மகா வித்தியாலயமாக்கியதன் மூலம் செய்துகொடுத்தேன்.

புதிய உபதபாற் கந்தோர்களை நிறுவிக்கொடுத்ததோடு உபதபாற் கந்தோர்களுக்கு டெலிபோன் வசதிகளும் செய்துகொடுத்தேன்.

இமையாணனில் மேசன் பயிற்சி நிலையம் நிறுவியதின் மூலம் கைத்தொழிற் துறையில் படித்தவாலிபர்களை ஈடுபடுத்தினேன்.

#### புதிய காரியாதிகாரி பிரிவு ஏற்படுத்தினேன்

உடுப்பிட்டித் தொகுதிக்கென ஒரு காரியாதிகாரி பிரிவை நிறுவி எனது தொகுதிமக்களின் ராஜாங்க அலுவல்கள் சிரமம் இன்றி நடைபெற ஒழுங்குசெய்து கொடுத்தேன்.

இப்படி அவர் தனது சாதனைகளைச் சொல்லிக்கொண்டேஇருந்தார். வடமராட்சிக் காரியாதிகாரி பிரிவை இரண்டாகப் பிரித்

**மூன்று டாக்டர்களுடனும் 5 தாதிகளுடனும் இயங்கிவந்த மந்திகை அரசினர் ஆஸ்பத்திரியில் 14 சிறந்த டாக்டர்களும், 26 தாதிமாரும் பணிபுரியுமளவுக்குத்தரம் உயர்த்த நானே காரணம்**

லுவது அவர்கள் வழக்கம். தமிழ்க்காங்கிரசைப் பொறுத்தவரையில் அன்றும் இன்றும் தமிழ்மக்களுக்கு எவ்விதத் தீங்கு நேரிடினும் துயர்த்துடைப்பதில் பின்நிற்பது இல்லை.

தமிழ்மக்களைத் தவருன வழியில் இழுத்துச் செல்வது தமிழரசுக்கட்சிதான். சமஷ்டிகிடைக்கும் என்பதில் தமிழரசு வாதிகளுக்கே நம்பிக்கை இல்லை: இன்னும் மூன்று சந்ததிகள் சென்றுலும் சமஷ்டிகிடையாது.

#### சமஷ்டி கோரிக்கையை கைவிட வேண்டும்

கே: அப்போ சமஷ்டி கோரிக்கையைக் கைவிட வேண்டும் என்கிறீர்களா?

ப: ஆம். தென்னிலங்கையில் சமஷ்டி என்பதை வகுப்பு வாதமாகக் கருதுகின்றனர். சமஷ்டியைக் கைவிட்டாலே நாம் பலசாதனைகள் புரியலாம். தமிழகத்தில் தி. மு. க. பிரிவினைக்கோரிக்கையைக் கைவிட்டதால்தான் ஆட்சி பீடம் ஏறியது.

கே: தமிழ்க்காங்கிரஸ் பொருளாதார ரீதியாகப் பல சாதனைகள் செய்துள்ளதாக திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் சொல்லி வருகிருரே- என்னசாதனைகள்?

ப: சொல்லித் தெரிய வேண்டுமா? தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலம் அமைச்சர் பதவி வகித்தபோதுதான் தமிழ்ப் பகுதிகள் பெரும் அபிவிருத்தி பெற்றன, காங்கேசன் துறை சீமெந்துத்தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைசேனை கடதாசித் தொழிற்சாலை, புல்மோட்டைகறுப்பு மண் தொழிற்சாலை ஆகிய நான்கு தொழிற்சாலைகளும் தமிழ்க்காங்கிரஸ் பெற்று வளர்த்த குழந்தைகள்தான்

400 கோடி ரூபாக்களுக்கு மேல் முதலீடுசெய்யப்பட்ட இத்தொழிற்சாலைகள் இன்று தமிழ்ப்பகுதிகளை வளம் கொழிக்கச் செய்துள்ளன. தமிழரசு அமைச்சர் பதவியில் இருந்தபோது தமிழ்ப் பகுதிகளுக்கு இவற்றில் பத்தில் ஒருபங்குதானும் செய்யவில்லை.

(இப்பொழுதுதான் அவர் தனது பதிலில் ஆவேசத்தைக் காட்டத் தொடங்கினுர்.)

#### பல்கலைக்கழகம்

கே: பல்கலைக்கழகவிடயத்தில் இருகட்சிகளும் அடிபட்டுக் கொள்ளுகின்றனவே. இந்த ஒரு நல்ல விஷயத்திலாவது இருகட்சிகளும் ஒரு முடிவான கருத்துக்கு வரமுடியாதா? தமிழ்க் காங்கிரஸின்

இரத்மலானை இந்துக் கல்லூரிக்கும் இத்தகைய அபாய நிலை ஏற்பட்டது என்று உடுப்பிட்டி 'சிவா' சுட்டிக் காட்டினுர்.

சென்னைப் பல்கலைக்கழகத்திலும், அமெரிக்கா ஹார்வாஜ்ட் பல்கலைக் கழகத்திலும் விசேட அழைப்பின் பேரில் சென்று சிறப்புச் சொற்பொழிவாற்றியும் மேற்குஜெர்மனிக்குத்தனது கோஷ்டியில் அங்கம்வகித்துச்சென்று பொருளாதார சுபீட்சத்திற்கு வழிகாட்டியும் புதுடில்லியில் நடைபெற்ற சர்வதேச ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மகாநாட்டிற்கு இலங்கைத் தூதுக்குழுவிற்குத் தலைமை வகித்துச்சென்று ஜனநாயகப் பெருமையை உலகுக்கு உணர்த்தியும் ஈழத்துக்குப் பெருமைதேடித்தந்த 'சிவா' வால் உடுப்பிட்டித்தொகுதி பெருமை அடைந்துவிட்டது என்றுஆதரவாளர் ஒருவர் உணர்ச்சியுடன் கூறினுர்.

#### மகாவலி வந்தே தீரும்

மகாவலி கங்கை யாழ்ப்பாணம் வந்தே தீரும் என்றும், அனுராதபுரத்தில் மகாவலி தேங்கினுல் அந் நகரமே வெள்ளத்தில் மூழ்கி விடும் என்றும் புவியல் நிபுணர் கருத்துப்படி கங்கை யாழ்ப்பாணம் திசைதிருப்பியே ஆக வேண்டும் என்று கூறினுர். ''சிவா''!

ஆட்சிமன்றத்தில் தமிழ் காங்கிரஸ் கட்சிக்குப்பலம் காணுது. அடுத்த தேர்தலில் எம்மில் கூடிய பிரதிநிதிகள் சென்றுல் இருவருடங்களில் பெறவேண்டியது எல்லாம் பெற்று விடமாட்டோமா என்றுப் கூறும் 'சிவா''வின் ஒரேயொரு குறை ''எவ்வளவு தான் நன்மை செய்தாலும் நன்மை சொல்லுகிருர் இல்லையே.''

(கே: பஸ் கொண்டக்டர்கள்)

மாணவ ஆசிரியர்கள் நியமனம் பற்றி.

ப: இந் நியமனங்களில் நான் எவ்வித பாரபட்சமும் காட்டுவது இல்லை. புள்ளி விகிதாசாரப் படியே நியமனங்கள் நடைபெறுகின்றன. இத்தகைய நியமனங்களில் நான் பாரபட்சமாக நடந்து கொண்டேன் என்று நிரூபித்தால் அடுத்த தேர்தலில் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன்.

#### இணைந்தால் பயன் அதிகம்

கே: தமிழரசு- காங்கிரஸ் இணைவதில் மூலம் பயன் கிடைக்கும் எக் கருதளாமா?

ப: அடிப்படையான ஒரு சில உரிமைகளைப் பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னார் பயங்கரவாதிகள்; தலைக்குவந்தது தலைப்பாகையோடு போயிற்று. என்பது போல் தோளில் பட்ட குண்டுக் காயங்களுடன் அவர்களிடமிருந்து தப்பிச் சென்றுள்ளார் பிரேஸில் நாட்டிலுள்ள அமெரிக்கத் தூதுவர்.

வேதனைப்படத்தக்க இந்தச் சூழ்நிலையில், லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் மேற்கொள்ளவிருந்த மேற்கு ஜெர்மன் அதிபர் வில்லி பிராண்ட், அச் சுற்றுப் பிரயாணத்தை ரத்துச்செய்துவிட்டு, அமெரிக்கா செல்லவிருக்கிறார். அமெரிக்காவில் ஜனதிபதி நிக்சனைச் சந்தித்து சர்வதேச நிலைமை பற்றிப் பேச்சு

வன்முறைச்செயல்களுக்கு ஊக்கம் ஊட்டி, வன்முறைகளைப் பயன்படுத்தியே ஆட்சியைக் கைப்பற்றி அதிகாரத்துக்கு வருகின்றவர்கள் கூட, நாளடைவில் அவர்களைவிட வலிமைமிக்கோரின் வன்முறை நடவடிக்கைளுக்கு இரையாக வேண்டியிருப்பதை அண்மைக்கால நிகழ்ச்சிகள் நமக்கும் பறைசாற்றுகின்றன.

எனவேதான் நிக்ஸன் — வில்லி பிராண்ட் சந்திப்பு வன்முறைச் செயல்களுக்கு முடிவுகட்டும் ஆக்கத் திட்டமொன்றுக்கு வழிவகுக்க வேண்டும் என்று, நாகரீகமான அரசியல் நடைபெற வேண்டுமென்பதில் நாட்டம் கொண்டோர் அனைவரும் எதிர்பார்க்கின்றனர்.

---

பாகக் கம்பீரமான ஓர் உருவம், மேல் துணி எதுவுமின்றி வெள்ளைச் சாரத்துடன் காட்சியளிக்கும்.

வருவோரை அண்ணை வாருங்கோ, தம்பி வாருங்கோ என்று அன்புடன் அழைத்து என்ன விஷயம் என்று கேட்டு அவர்கள் குறைகளைத் தனது குறைகளாக ஏற்று, பரிகாரம் காணும் அந்த உருவம் 'உடுப்பிட்டிச் சிவா' உடையது.

அதிகாலை 'கன்வசிங்'கிற்குச் சென்று மத்தியானம் வந்து சாப்பிடுவார், பின்னர் மறுபடியும் கிளம்பிவிடுவார். அதற்கிடையில் இன்னும் உதவி கேட்டு வருவோர் ஒருபுறம் ஆதரவாளர்கள் மறுபுறம். இவர்களின் அன்புத் தொல்

...நாட்டில் வாழும் மக்களுக்குக் காட்டவே நான் தமிழரசுக்கட்சியினருடன் ஒத்துழைத்தேன்.

அன்றைய அரசாங்கத்தை நாம் ஒருமனதாக எதிர்த்தாலும், தமிழ்மக்களையும், தமிழ்ப் பகுதிகளையும் அன்றைய அரசாங்கம் புறக்கணித்ததாலும் அப்பொ

குழாய்நீர், நீர்ப்பாசன ... நியோகத் திட்டத்தைக் கூறுவேன். இத்திட்டத்திற்கென 7 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தண்ணீர்ப் பஞ்சமான பகுதிகளில் ... வெட்டியும் ஒன்று. இங்குள்ள இளம் பெண்களும், குழந்தைகளும் பல மைல் தூரம் நடந்துசென்று குடங்களில் தண்ணீர் அள்ளிவரும் காட்சியைக் காண்பவர்கள் கண்கலங்கவே செய்வர். இத்திட்டம் ஆரம்பித்துவைக்கப்பட்டதின் மூலம் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட மக்களின் தண்ணீர்த் தாகம் தீர்த்துவைக்கப்படவிருப்பது எனக்கு கிடைத்த வெற்றியாகும்.

முன்னர் 2, 3 டாக்டர்களுடனும் 5 தாதிகளுடனும் இயங்கிவந்த மந்திகை அரசினர் ஆஸ்பத்திரி இன்று

## 'வேலையற்ற வாலிபர்களுக்காக பிரதமரிடம் பல திட்டம் சமர்ப்பித்தேன்'

யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரிக்கு அடுத்ததாக விளங்குகிறது. இன்று மந்திகை ஆஸ்பத்திரியில் 14 சிறந்த டாக்டர்களும், 26 தாதிமார்களும் பணிபுரிகின்றனர். எக்ஸ்ரே நிலையமும் சத்திர சிகிச்சை நிலையமும் கட்டப்பட்டுவருகின்றன. இன்னும் மூன்று ஆண்டுகளின் பின் மந்திகை ஆஸ்பத்திரி யாழ் பெரியாஸ்பத்திரியின் தரத்தை அடைந்துவிடும். இதற்கு நானே காரணம்.

புருப்பொறுக்கி, துன்னலை புலோலி ஆகிய பகுதிகளுக்கு எனது முயற்சியால் அரசாங்கம் தனது செலவில் மின்சாரம் வழங்கியுள்ளது.

நெல்லியடிப் பட்டின சபையைப் பொறுத்தவரையில் எனது வேண்டுகோளை ஏற்று அரசாங்கம் 2 லட்சம் ரூபா கடனுதவி வழங்கி உள்ளதால் இன்னும் ஒரு வருடத்திற்குள் மின்சாரம் கிடைத்துவிடும்.

உடுப்பிட்டிச் சந்தியைச் சூழ்ந்த 2 மைல்களுக்குள் மின்சாரம் வழங்கவென உடுப்பிட்டிக் கிராமசபைக்கு அரசாங்கத்திடமிருந்து 2லட்சம் ரூபா கடன் கிடைக்க முயற்சிசெய்தேன் இத்திட்டத்தில் கம்பர் மலைக்கும் மின்சாரம் கிடைக்கும்.

இந்த இரு திட்டங்களும் பூர்த்தியானல் அல்வாய், மண்டான் ஆகிய கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்க

நடைபெற ஒழுங்குசெய்து கொடுத்தேன்.

இப்படி அவர் தனது சாதனைகளைச் சொல்லிக் கொண்டேஇருந்தார். வடமராட்சிக் காரியாதிகாரி பிரிவை இரண்டாகப் பிரித்ததின்மூலம் உங்களுக்கு எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதாக கூறுகிறார்களே என்று கேட்டேன்.

காரியாதிகாரி பிரிவை இரண்டாகப் பிரித்ததின் மூலம் மக்கள் பரவலான பயன்பெறமுடிகின்றது. அரசாங்கம் 6 புதிய காரியாதிகாரிபிரிவுகளை நிறுவியது. உடுப்பிட்டித் தொகுதியின் மத்தியில் காரியாதிகாரி அலுவலகம் அமையவேண்டும் என்பதாலேயே வதிரியில் நிறுவினேன், இதனுல் புலோலிப்பகுதி மக்கள் எவ்வித கஷ்டமும் அடைய வேண்டியதில்லை. என்மீது எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் எப்பொழுதும் எதிர்த்துக் கொண்டுதான் இருப்பார்கள் என்று சொன்னுர் அவர்.

### ஒருவரால் முடியுமா?

கே: வேலையில்லாத் திண்டாட்டம் தான் எம். பி. மாருக்குக் கலக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறுகிறார்களே?

ப: உண்மைதான்! படித்த வாலிபர்கள் எல்லோருக்கும் வேலைபெற்றுக் கொடுப்பது என்பது இயலாதகாரியம். அதுவும் ஒரு தனி ஆட்சிமன்ற உறுப்பினனுல் இப்பிரச்னைக்குப்பரிகாரம்கண்டுவிடமுடியாது.

வேலையற்ற வாலிபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப் பலதிட்டங்களை நான் பிரதமருடனும், அமைச்சர்களுடனும் ஆலோசித்துச்சமர்ப்பித்தேன். அவர்கள் இத்திட்டங்களைஏற்றுக்கொண்டபோதிலும் அமுல்படுத்தத் தயங்குகின்றார்கள். படித்த வாலிபர்கள் அரசாங்கஉத்தியோகங்களை நம்பியிராது தொழில்துறையில் ஈடுபட வேண்டும்.

கே: கைத்தொழில் செய்வதை எமது வாலிபர்கள் கேவலமாகக் கருதுகிறார்களே?

ப: பரம்பரைக் கைத்தொழில்கள் என்ற பேதம் கிடையாது. ஒரு கைத்தொழிலில் ஈடுபட்டால் இழுக்கு எனக் கருதுவதுதான் இழுக்கு ஒரு தொழில் ஒருவருக்குத்தான் சொந்தம் என்ற நிலைமாறி எல்லோரும் அத்தொழிலைச் செய்தால் பொருளாதாரத்தில் முன்னேறுவதுடன் சாதிபாகுபாடும் எம்மைவிட்டு ஓடிவிடும்.

கே: தமிழ்க் காங்கிரஸ் தமிழ்மக்களை ஏமாற்றிவிட்டதாகத் தமிழரசுக்கட்சியினர் சொல்லுகிறார்களே?

ப. அப்படித்தான் சொல்

...திலும் இருகட்சிகளும் அடிபட்டுக் கொள்ளுகின்றனவே. இந்த ஒரு நல்ல விஷயத்திலாவது இரு கட்சிகளும் ஒரு முடிவான கருத்துக்கு வரமுடியாதா? தமிழ்க் காங்கிரஸின் கொள்கை இவ்விஷயத்தில்?

ப: இதில் யோசிப்பதற்கு இடமில்லை. பல்கலைக்கழகம் அரசியல் வாதிகளுக்கு அரசியல் காரணங்களுக்காகப் பயன்படுத்தும் ஒரு சாதனமல்ல. கடந்த 25 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்திலிருந்து 100க்குத் 90 வீதமான மாணவர்கள் தான் பல்கலைக்கழகம் செல்கின்றனர்.

எமது பகுதியில் சிறந்த பல கல்லூரிகள் இருப்பதாலும், பல்கலைக்கழகம் செல்லும் மாணவர் தொகை குறையாது இருப்பதாலும் யாழ்பபாணத்தில்தான் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டும் என்று தமிழ்க்காங்கிரஸ் கருதுகின்றது.

7 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீமா ஆட்சிக் காலத்தில் இராமநாதன் கல்லூரியில் பல்கலைக்கழகம் நிறுவ அடையாள மானியம் ஒதுக்கப்பட்டது.

### திருமலைமீது துவேசமா

கே: தமிழ்க் காங்கிரஸ் திருமலைமீது துவேஷம் காட்டுகிறதாமே?

ப. (சிரித்து விட்டு) யார் சென்னது. எமது கருத்தைச் சிலர் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை எமக்கு திருமலைமீது எவ்வித துவேஷமோ வெறுப்போ கிடையாது. திருமலையில் பல்கலைக்கழகம் வேண்டாமென்று நாம் கூறவுமில்லை அங்கு பல்கலைக்கழகம்செல்லும் தமிழ்மாணவர் தொகை அதிகரித்தும் கட்டாயம் திருமலையில் பல்கலை கழகம் வேண்டுமென்று கோருவோம்.

கே: இப்போது திருமலையில் பல்கலைககழகம் நிறுவதை ஏன் எதிர்க்கவேண்டும்?

ப: அருமையான கேள்வி-கட்டாயம் விளக்கம் கூறத்தான் வேண்டும். (சொல்லத் தொடங்கினுர்) தமிழருக்கென ஒரு பல்கலைக் கழகம் கொடுக்க முடியாது. இருமொழிப் பல்கலைக்கழகம் தான் கொடுப்போம்என்று பிரதமர் டட்லி கூறியதை தமிழரசுக்கட்சினரும் ஏற்றுக்கொண்டனர்,

திருமலையில் பல்கலைகழகம் செல்லும் தமிழ்ப்பிள்ளைகள் குறைவு என்று முன்னமே குறிப்பிட்டேன் ஆதலால் திருமலையில் இருமொழிகளிலும் பல்லைகலைக் கழகம் அமைத்தால் கூடிய கெதியில் தனிச் சிங்களப்பல்கலைக்கழகமாகி விடும்.

கே: தமிழரசு-காங்கிரஸ் இணைவதில் மூலம் பயன் கிடைக்கும் எக் கருதளாமா?

ப: அடிப்படையான ஒரு சில உரிமைகளைப் பெற வேண்டுமென்றால் நாம் இணையத்தான் வேண்டும். இதுபற்றி நானும், ஜீ. ஜீ யும் கேட்டபோது 'அமிர்' கேலி செய்தார். எம்மிடையே ஒற்றுமையில்லாததால் பாரதூரமான விளைவுகளை அனுபவிக்கின்றோம்.

நாம்ஒற்றுமைப்படுவதற்கு இரு கட்சிகளும் இணையத் தயாரா என்று ஜி ஜி அறிவித்தபோது செல்வநாயகம் ஒற்றுமையென்றால் ஒருகட்சி முற்றாக அழியவேண்டும்என்றார். தமிழின ஒற்றுமை இப்படி இழுபறிபட்டுக்கொண்டிருக்கின்றது.

---

# தமிழ் பண்ணிசைபாடி பரமனடி அடைவோம்!

மல்லாகம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் இன்று நடைபெறும் அகில இலங்கை சைவப்புலவர் சங்க திருமுறைப பண்ணிசை விழாவை யொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது.

திருவருட் செல்வர்களில் சிறப்புப் பெற்றவர்கள் நால்வர். அவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மணிவாசகர்,மூன்றுவயதில் ஐயாஎன ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனுன சிவனை விழித்து'தோடுடைய செவியன்' என்றார் சம்பந்தர். சூலநோயில் வருந்திய மருள் நீக்கியார் 'கூற்ருயினவாறு எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி திருநாவுக்கட்லெகல்லாம் அரசர் என்ற திருப்பெயரைப் பெற்றார். முன்னைப் பழம் பொருளை மறந்த சுந்தரர் 'பித்தா' என்று பரமனைப் பாடி மெய்தானரும்பிவிதிர்விதித்துத் தோழராக்கிக் கொண்டார், தேனினுமினிய திருவாசகத்தை இறைவனுக்குச் சமர்ப்பித்த மணிவாசகர் 'பாவைபாடிய வாயால் கோவை பாடுக'எனப் பரமனல் பணிக்கப்பட்டார். இவர்களது திருமறைகள் எட்டுத் திருமுறைகளிலும் அடங்குகின்றன. வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனை ஏத்திஎத்தித் தொழ எங்களுக்கு இத்திருமுறைகளை விட்டுச் சென்றனர் நாயன்மார்கள். தமிழிசை தொன்மையானது பண்களே அவற்றிற்கு வித்து. நால்வர் விட்டுச் சென்ற பாசுரங்களைத்தில்லை மூவாயிரவர் பாராயணம் செய்தனர். அவர்கள் வழியைப் பின்பற்றி மற்றவர்களும் அப்பணியைச் செய்து வருகின்றனர். தமிழ் நாட்டில் உள்ள ஆதினங்கள் இவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிப்பது திருவருட் பேறு. அநபாயசோழன் காலம் முதற் கொண்டு இன்றுவரை இத் திருமறைகள் முறையாக ஓதப்பட்டு வருதலை நாம் காண்கின்றோம்.ஈழத்திலும்இது பரவலாக அன்று தொட்டு இன்றுவரை தளராமல் வளர்ந்து வருதலை நாம் காண்கின்றோம்.

இருப்பினும் சலனப்படப் படையெடுப்பின் பின் எம் திருமுறைகளில் உள்ள பண்முறைக்குப் பழுதுவரப் பார்க்கின்றது. முறையாக வந்த பண்கள் அதற்கேற்ற கர்னடக இசை அமைவுகள் மறைய ஆரம்பித்தன. உதாரணமாக 'மாதர் பிறைக் கண்ணியானை' என்னும் தேவாரத்தை எடுத்துக் கொண்டால் அதை நவரோசு என்னும் இராகத்தில் பாடுவதே பாரம்பரியம். சினிமாவிலும் நாடகத்திலும் அதை மாற்றியே பாடிவிட்டார்கள்.இம் முறையில் நாம் கைக்கொண்ட கொள்கைகளை எம் வழித் தோன்றல்கள் எவ்வாறு கைக்கொள்ளுவார்கள்? என்ற கேள்வியும் எழுகின்றது. இது சைவர்களாகிய எம் முன் நிற்கும் ஒருபெரும் பிரச்னை இவற்றிற்குப் பரிகாரம் தேடும் நோக்கமே அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் இன்றுநிகழ்த்தும் போட்டி முயற்சி.

இக்காலத்தில்இசையோடு கூட்டிப்பாடும் பாடல்களில் திருமுறைகளும் முக்யத்துவம் பெறுகின்றன மகிழ்ச்சி. தேவாரம் என்பது தெய்வத்திற்குரிய சொல்லொழுகும் இசையொழுக்கும் உடைய பாட்டு எனப் பொருள் கூறுவர். அவற்றிற்கு அமைந்த பண்கள் 21, 24,27 என்று பலவாருகக் கூறப்பட்டுள்ளது திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருத்தாளச்சதி திருப்பதிகத்தில் 'ஏழே யேழே நாலே மூன்றியல் இசையிசையியல்பா, வஞ்சத்தேய் வின்றிக்கே மனங் கொளப் பயிற்றுவோர்'என்று பாடியருவியபடி அக்காலத்துப் பாடிய பண்கள் 21 என்று கொள்ளுவாரும் உளர். தற்போது தேவாரப்பண்கள் 24 என்றும் அவை பசற்பண் இராப்பண் பொதுப்பண் ணென்றும் மூன்று பிரிவுகளாக உள்ளது என்றும் கூறுவர். இப்பண்களைத் திருக்கோயில்களில் ஓதுபவர்கள் தற்காலச் சங்கீத இராகமுறைகளிலேயே தொன்றுதொட்டு வழங்கிவரும் வழியைப்பின்பற்றிப் பாடிக்கொண்டு வருகின்றார்கள். பண் என்பது பொதுவாக இராகத்திற்கும் பாட்டிற்கும் பொதுவாகப் பொருள் அமைந்து நிற்பது குறிக்கத் தக்கதாகும். இப்பண்களுக்குச்சீரான ஒருதாளம் அமைத்து அதற்கேற்ப இசைத் திறனுடன் மடக்கியும் படிக்கிறார்கள்.

தியாகராஜசுவாமிகளுடைய கீர்த்தனங்களையும் பேணிக்காக்கவேண்டியது அவசியம். அதற்காகத் திருமுறைகளையும்தமிழ்ப்பாடல்களையும் மறக்கலாமா? பண்ணென்று எங்களுக்குக் கிடைத்ததைப் பண்போடு காத்து வளர்ப்பதே எம்பண்பாடாக அமையவேண்டும். இருபது வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார், வருடம் ஒரு பண்ணிசைப் போட்டி நடாத்தி பாடசாலை மாணவர்களிடையே பண்வளர்ச்சிக்குப் பெரும்ஊக்கம் கொடுத்தார்கள் மெச்சுகிறோம். அகில இலங்கை ரீதியில் கொழும்பு விவேகானந்த சபையாரும் பண்ணிசைப் போட்டிநடாத்தித் தங்கப் பதக்கங்களும் பரிசில்களாக வழங்கினுர்கள். மகிழ்ந்தோம். ஆனல் சிறிதுகாலம் பண்ணென்ற சொல்லே போட்டிகள் அமைப்பதில் இல்லாமலிருந்தது. இவ்வாண்டு அப்பெருங் குறையை அ இ சை. பு. சங்கத்தினர் இவ்வழியில் அகில இலங்கை ரீதியில் புத்தூக்கம் அளிக்கவருவது மகிழ்ச்சிக்குரியது சுந்தரர் செந்தமிழில் ''ஏழிசையாய் இசைப்பயனுய்'' இன்னமுதாய் ''என்றார் சம்பந்தர்'' நாளுமிகு பாடலொடு ஞானமிகு நல்லமலர் வல்ல வகையால்'' என்றார் ஆகையால் திருமுறைகளைக் காதலாகிக்கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார் முன்இறைவன்நிற்பான். இசை இறைவனுக்கு விருப்பமானது. ஆனபடியாற்றான் மணிவாசகரும் 'இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்'' என்றார் இத்தகைய தமிழ் மறையைப் பண் பிறழாது ஓதுவாரை நன்னெறிக்குய்ப்பது சிவம், இராவணன் சிறப்பு இசையால் மிளிர்ந்தது, அருணகிரியார், சேந்தனுர். குமரகுருபரர், ஆழ்வார்கள் மீரா ஆகியோர் தமிழ்ப்பண்ணிசைபாடி பரமனைஅடைந்தார்கள் அவ்வாறே நாமும் பாடிப்பரமனடி அடைவோம்.

பொன் தெய்வேந்திரன்.

---

## சிவகாமி அம்மையார் சமாதியானர்



யாழ்ப்பாணம், வெள்ளி

சிவகாமிப்பிள்ளை அம்மையார் துன்னலை கோவிற்கடவைக் கிராம வாசியான மைலர் சின்னையாவுக்கு புத்திரியாக அவதரித்தார். தெய்வ பக்தி மிக்கவராகத் தென் இந்தியாவில் பாடல் பெற்ற தலங்களையும் ஈழத்தில் பிரசித்தி பெற்ற தலங்களையும் தரிசித்து ஈற்றில் கேதீச்சரத்தில் வசித்து சிவதொண்டாற்றினுர். இவர் தொடர்ந்து 45 நாட்கள் இன்றி நிஷ்டையிலிருந்தார். நிஷ்டையிலிருந்தபடியே சமாதியானுர்.

## 'நம்நாடு' திரையிடத்தடை

கோட்டை, வியா.

இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்முடியும்பெறும் வரை 'நம்நாடு' என்னும் தென்இந்தியத் தமிழ்த் திரைப்பட வெளியீட்டை இலங்கைத் திரைப்படத் தணிக்கைச்சபை தடுத்திருப்பதாக அறியவருகிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org